விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பன்னிரண்டு ═══ Valampurii ═══

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2039 மார்கழி 24 வியாழக்கிழமை (08.01.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 020




# விடுதலைப் புலிகளை தடை செய்தது அரசு

## அமைச்சரவை ஏகமனதாக ஆதரவு

(கொழும்பு)

இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளை ஒரு பயங்கரவாத அமைப்பு எனக் கூறி அவர்களை தடை செய்வதாக அரசாங்கம் நேற்று மாலை அறிவித்துள்ளது.

இத்தடை உடனடியாக அமுலுக்கு வருகின்றது. தமது எச்சரிக்கையை மீறியதால் இத்தடை விதிக்கப்படுவதாக அரசு அறிவித்துள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி மற்றும் முகமாலையை இராணுவம் கைப்பற்றியது

### பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

கிளாலி மற்றும் முகமாலை முன்னரங்கப் பகுதிகளை இராணுவத்தினரின் 53-வது படைப் பிரிவினர் நேற்று முன்தினம் மாலை கைப்பற்றியதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் கடுமையான எதிர்த் தாக்குதல்களை நடத்தியவாறு யாழ். குடாநாட்டின் தெற்கு மற்றும் தென்கிழக்கு பகுதிகளிலிருந்து பின்வாங்கி ஏ-9 வீதிக்கு சமாந்தரமாக மூன்றாவது பாதுகாப்பு எல்லை அமைக்கப் (12ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளின் களமுனைகளை 'றோ'வின் விமானங்கள் கண்காணிப்பு

(கொழும்பு)

கிளிநொச்சி நகரம் படையினரால் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து விமானங்களில் பொருத்தப்பட்ட அதிநவீன ஒளிப்பட சாதனங்களின் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை இந்திய உளவு நிறுவனமான றோவின் விமானங்கள் கண்காணித்து வருவதாக கொழும்பு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த ஊடகத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கிளிநொச்சி நகரம் படையினரால் கைப்பற்றப்பட்டதை தொடர்ந்து விமானங்களில் பொருத்தப்பட்ட அதிநவீன ஒளிப்பட சாதனங்கள் மூலம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளை இந்திய உளவு விமானங்கள் கண்காணித்து வருகின்றன.

இதேவேளை அரசின் வேண்டுகோளுக்கு இணங்கவே இந்த உளவு வேலைகளில் இந்தியா ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றபோதும் அதனை உறுதிப்படுத்த முடியவில்லை.

இந்திய உளவு அமைப்பான றோவின் இரகசியப் பிரிவுகளின் ஒன்றான வான் ஆய்வு மையத்தைச் சேர்ந்த விமானம் ஜனவரி 3ஆம் திகதி அதிகாலை 3 மணிக்கு சென்னையிலிருந்து (12ஆம் பக்கம் பார்க்க)

## படையினர்-புலிகள் மோதல்

(முல்லைத்தீவு)


முல்லைத்தீவு-அம்பகாமத்தில் உள்ள பழைய கண்டி வீதி ஊடாகப் படையினர் நேற்று முன்தினம் மேற்கொண்ட முன்நகர்வு தமிழீழ விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளது.

இதில் படையினரின் 7 உடல்கள் உட்பட படையப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

அம்பகாமம் (12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளை தடை செய்வதன் மூலம் பிரச்சினையை தீர்க்க முடியாது

### இரா.சம்பந்தன் தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழ்த் தேசியப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியாக தீர்வு காண்பதற்கு அரசு எடுத்திருக்கின்ற ஒரு முடிபே புலிகள் மீதான தடைவிதிப்பு என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் கருத்து வெளியிட்டுள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் விமானப் படையை அழிக்கக் கோருகிறது ஐ.தே.க

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட பகுதிகளை கடந்த காலங்களைப் போல் மீண்டும் இழந்து விடக் கூடாது என்றும் அவர்களின் விமானப் படையை அழித்தாக வேண்டும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்ட முன் வடிவின் மீதான விவாதத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க பேசியதாவது,

படைகளில் இருந்து தப்பியோடியவர்களை கைது செய்து சிறையில் அடைக்கிறோம். ஏன் அவர்களுக்கு நாம் மறுவாழ்வு அளிக்கக் கூடாது?

ஐக்கிய தேசியக் கட்சியானது எப்போதுமே பயங்கரவாதத்தை எதிர்க்கும். பயங்கரவாத பேயை (12ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணைத் தாக்குதலில் இரு பாடசாலைகள் சேதம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் உள்ள முரசுமோட்டைப் பகுதியில் படையினரின் தொடர் எறிகணைத் தாக்குதல்களினால் இரு பாடசாலைகள் சேதமடைந்தன.

முரசுமோட்டை மக்கள் குடியிருப்புக்களை இலக்குவைத்து படையினர் தொடர் எறிகணைத்தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இதனால் முரசுமோட்டை முருகானந்தா மகாவித்தியாலயம் கடுமையாகச் சேதமடைந்துள்ளது.

முரசுமோட்டை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் (12ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தின் இழப்புகளைக் குறைக்க பின்வாங்குதல் என்பது தந்திரோபாயம்

### ஜூனியர் விகடனுக்கு நடேசன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

யுத்தத்தின் இழப்புக்களைக் குறைப்பதற்காக பின்வாங்குவது என்பது தந்திரோபாயம் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்திலிருந்து வெளிவரும் ஜூனியர் விகடன் (11.01.2009) வாரமிருமுறை இதழுக்கு அவர் அளித்த நேர்காணலில், இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

பத்தாண்டுகளாக உங்கள் கட்டுப்பாட்டில் இருந்த கிளிநொச்சி கடைசியில் இலங்கை வசம் போய்விட்டது புலிகளுக்கு பின்னடைவு தானே?

கிளிநொச்சி இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் சென்றது முதல் தடைவையல்ல. பல தடைவைகள் இராணுவத்திடமிருந்து கிளிநொச்சியை நாம் மீட்டது மட்டுமல்ல கட்டுப்பாட்டுக்குள்ளும் நீண்ட காலம் வைத்திருந்துள்ளோம். இதுதான் வரலாறு.

நாம் இதனைப் (02ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நிரந்தர நியமனம் வழங்கலில் முறைகேடு தொண்டர் ஆசிரியர்கள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

நிரந்தர நியமனம் வழங்கலில் முறைகேடு



நடந்ததாக தெரிவித்து யாழ்ப்பாணத் தொண்டர் ஆசிரியர்கள் கவன ஈர்ப்புப் போராட்டம் ஒன்றை நேற்று ஆரம்பித்துள்ளனர்.

தமக்கு சாதகமான பதில் கிடைக்கும்வரை இப்போராட்டத்தை தொடர்ந்து நடத்தப் போவதாக தெரிவித்துள்ளனர்.

நேர்முகத் தேர்வுக்குத் தோற்றிய 447 தொண்டர் ஆசிரியர்களில் எந்தவித அளவு கோலுமின்றி எழுமாறாக தெரிவு செய்யப் பட்ட 53 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு கல்வியமைச்சின் ஊடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனை அறிந்து வேதனையும் மன உளைச்சலும் அடைகின்றோம்.

தகுதியான ஏனையோரின் நிலைதான் என்ன ?

ஆகவே தொண்டர் ஆசிரியர்களுக்காக கேட்கப்பட்ட தகுதியின் அடிப்படையில் 53 பேருடன் தகுதியான அனைத்துத்தொண்டர் ஆசிரியர்களுக்கும் ஒரே திகதியில் நியமனம் பெற்றுக்கொள்வதன் நோக்கமாக கவன ஈர்ப்புப் போராட்டம் ஒன்றை 07.01.2009 தொடக்கம் எமக்கு சாதகமான பதில் கிடைக்கும் வரை தொடர்ச்சியாக மேற்கொள்ளவுள்ளோம் என அவர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளனர். (ச)

# கட்சியின் பெயரைப் பயன்படுத்தி கப்பம் கோரினால் அறிவியுங்கள்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பெயரால் அல்லது அதன் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் பெயரால் எவரும் கப்பம் கோரியோ, கடனுக்கு பொருட்கள் மற்றும் காசு கோரியோ அல்லது நிதி, நன்கொடைகள் கோரியோ வந்ததால் அவ்விடயம் தொடர்பாக உடனடியாக தனக்கு அறிவிக்கும்படி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக் கொண்டுள்ளார்.

கடந்த 5ஆம் திகதி யாழ். வர்த்தகப் பிரமுகர்களை சந்தித்து பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடியபோதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இக்கோரிக்கையை முன்வைத்தார்.

தனது பெயரையோ, தனது அமைச்சின் பெயரையோ அல்லது தனது கட்சியின் பெயரையோ பயன்படுத்தி கப்பம் கோருதல், பணம் பறித்தல்,பொருட்களை வாங்குதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடும் வகையில் எவரும் எந்தவொரு வர்த்தக நிலையங்களுக்கும் வந்தால் உடனடியாகத் தனக்கு அறிவிக்கும் படியும் இல்லையேல் பக்கத்தில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கும் படியும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்படி வர்த்தகப் பிரமுகர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதே சமயம் தனது பெயரையும் தனது கட்சியின் பெயரையும் பயன்படுத்தி எவரேனும் துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டால் அல்லது அநீதி விளைவிக்கும் செயல்களில் ஈடுபட்டால் அவ்விடயம் தொடர்பில் உடனடியாகத் தனக்கு அறிவிக்கும் படியும் அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களில் அல்லது இராணுவ முகாம்களில் அறிவிக்கும்படியும் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியானது பொது மக்களிடம் எந்தவொரு அறவீடுகளையும் மேற்கொள்வதில்லை என்பதையும் மனித நேயமற்ற செயல்களில் ஈடுபடுவதில்லை என்பதையும் கூறியுள்ள அமைச்சர், இவ்வாறான செயற்பாடுகளுக்கு தான் ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார். (எ)

# யுத்தத்தின் இடிப்புகளை...

பின்னடைவாகப் பார்க்கவில்லை.

**தற்போது நடந்து வரும் போரில் விடுதலைப் புலிகள் சில இடங்களில் எதிர்த்தாக்குதல் நடத்தாமல் பின்வாங்கி போகிறார்களே ஏன்?**

யுத்தத்தில் இழப்புக்களை குறைப்பதற்காக பின்வாங்குவதென்பது தந்திரோபாயம்.

**இந்தப் போரால் என்ன சாதிக்க நினைக்கிறது இலங்கை அரசு?**

முழுத்தமிழ் தேசிய இனத்தையும் பூண்டோடு அழிக்கவே இலங்கை அரசு நினைக்கின்றது. ஈழத் தமிழர்கள் யாருமற்ற அனாதைகள் அல்லர் என்பதையும் ஈழத் தமிழர்களுக்கு இன்னல்கள் ஏற்பட்டால் தொப்புள் கொடி உறவுகளான ஏழு கோடி தமிழர்கள் தமிழகத்திலிருந்து குரல் கொடுப்பார்கள் என்ற செய்தியை இலங்கை அரசிற்கும் உலகத்திற்கும் முக்கிய செய்தியாக எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது.

**பிரபாகரனின் கனவு நகரமாக உருப்பெற்ற கிளிநொச்சி சிதைந்து தகர்க்கப்பட்டதில் உங்களுக்கு வருத்தம் இல்லையா?**

வருத்தம்தான். கட்டடங்கள் பாதிக்கப் பட்டனவே ஒழிய விடுதலைக்கான எமது கதவுகள் தகர்க்கப்படவில்லை. மீளவும் இழந்த பிரதேசங்களை கைப்பற்றி கட்டடங்களை உருவாக்குவோம். ஆனால் காவல்துறை, வங்கி, நிதித்துறை என்பன இடம்பெயர்ந்த நிலையில் இயங்கி வருகின்றது என்பதனையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

**கிளிநொச்சியில் இருந்த மக்கள் எல்லோரும் இப்போது எங்கே இருக்கிறார்கள்?**

அவர்கள் அனைவரும் வன்னிப்பெரு நிலப்பரப்பில் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்து உள்ளனர். எமக்கு சாதகமாக சூழல் ஏற்படும்பொழுது கிளிநொச்சியை மீளவும் கைப்பற்றி மக்களை குடியேற்றுவோம்.

**புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் நிலப்பரப்பில் தற்போதுள்ள நிலைமை என்ன?**

எம்முடைய மக்கள் தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கைகளுக்கும் இடப்பெயர்வுகளுக்கும் முகம்கொடுத்த நிலையில் இழந்த பிரதேசங்களை மீளக்கைப்பற்றவேண்டும் என்ற மனோநிலையில் வாழ்ந்து வருகின்றனர். இதற்காக சகல மக்களும் அளப்பரிய தியாகங்களையும் அர்ப்பணிப்புக்களையும் நல்கி வருகின்றனர்.

**புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகள் இராணுவத்தின் பிடியில் போனது அவர்களுக்குப் பலம் என்பதனை ஒத்துக் கொள்கிறீர்களா?**

இலங்கை ஒரு அரசு. அதற்குப் பல நாடுகள் இராணுவ பொருளாதார உதவிகளை நல்கி வருகின்றன. நாம் ஒரு விடுதலை இயக்கம். தமிழ் தேசிய இனத்தின் எண்ணிக்கை சிங்கள தேசிய இனத்தின் எண்ணிக்கையோடு ஒப்பிடும்போது சிறியதே.

எம்முடைய மக்களின் பலத்துடனும் உலகத்தமிழ் இனத்தின் தார்மீக ஆதரவுடனும் இந்த விடுதலைப் போராட்டம் நடைபெற்று வருகின்றது. சமர் களங்களில் இடங்கள் பறிபோவதும் மீள நாம் கைப்பற்றுவதும் வழமை.

**புலிகள் மீதான தடையை அகற்றி விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டுமென்கிறீர்கள். இது நடக்கக் கூடியதா?**

உலகத் தமிழ் இனம் ஒன்றுபட்டு எமது விடுதலைப் போராட்டத்திற்காக நல்கிவரும் ஆதரவு, எதிர்காலத்தில் இது சாத்தியமென்பதைக் காட்டுகிறது.

புலிகளைவிட இலங்கை அரசு மீது இந்தியாவுக்கு நேசம் அதிகமாக இருக்கிறது.

இது மிகவும் மனவேதனையைத் தருகின்றது. இந்தியாவின் உண்மையான நண்பர்கள் தமிழ் மக்கள் தான் என்பதனை இந்திய அரசு விளங்கிக்கொள்ள வேண்டும் என்ற உண்மையை நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம்.

**இலங்கையோடு பிற நாடுகள் கைகோர்த்துக் கொண்டு போர் நடத்தி வருகிறது என்று சொல்லப்படுகிறதே?**

இது முற்றிலும் உண்மை. அவர்களுக்கு வெளிநாடுகளில் இருந்து குறிப்பாக சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளிலிருந்து கப்பல் கப்பலாக ஆயுதங்கள் வந்த வண்ணமுள்ளன. இதைக் கொழும்பிலுள்ள ஊடகங்களே உறுதிப்படுத்துகின்றன.

**இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவின் தலையீடு எந்த வடிவில் இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்கள்?**

இலங்கை அரசுக்கு இராணுவ உதவிகளை நிறுத்தி எம்முடைய மக்களின் விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டுமென எதிர்பார்க்கிறோம்.

**இலங்கை அரசின் வானூர்திக் குண்டு வீச்சுக்கள், ஏவுகணைத் தாக்குதல்கள் அதிகமாகிவருகிறதே... இதிலிருந்து மக்கள் எப்படி தங்களைத் தற்காத்துக் கொள்கிறார்கள்?**

30 வருடகாலமாக எம்முடைய மக்கள் வானூர்திக் குண்டு வீச்சுக்களுக்கும் எறிகணை வீச்சுக்களுக்கும் பாரிய இராணுவ நடவடிக்கைகளுக்கும் முகம் கொடுத்த வண்ணமே வாழ்ந்து வருகின்றனர்.

அரசின் கொடிய தாக்குதல்களுக்கு இலக்காகும் பொழுது தம்மை எவ்வாறு பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்பதில் மக்களுக்கு நிறை அனுபவங்கள் உண்டு. போராட்டமே வாழ்வாக மாறிவிட்ட எம் மக்கள் சிறு குழந்தைகளிலிருந்து முதியோர் வரை தம்மைத் தற்காத்துக் கொள்வதில் தேர்ச்சி பெற்று வருகின்றனர்.

உலக அளவில் தடை செய்யப்பட்ட கிளஸ்ரர் குண்டுகளையே அரசு எம் மக்கள் மீதான தாக்குதல்களுக்கு பயன்படுத்தி வருகின்றது என்பதனையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (ச-5)

# தர்மபுரம் வைத்தியசாலைக்கு மருந்து அனுப்ப நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி -தர்மபுரம் வைத்திய சாலையில் மிக அவசரமாகத் தேவைப்படும் சில மருந்து வகைகளை அங்கு அனுப்பி வைக்க உத்தரவு வழங்குமாறு தமிழ் தேசிய கூட்டமைப்பு, சுகாதார அமைச்சருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

தொடரும் யுத்தம் காரணமாக காயமடையும் பொதுமக்களுக்கு இரத்தம் ஏற்றுவது தொடர்பிலான மருந்துகளுக்கு தர்மபுரம் வைத்தியசாலையில் பாரிய தட்டுப்பாடு நிலவுவதாக அமைச்சருக்கு சுட்டிக்காட்டப்பட்டது.

கூட்டமைப்பு எம்.பிக்கள் என்.ஸ்ரீகாந்தா, விநோநோதராதலிங்கம் ஆகியோரின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட அமைச்சர் சிறிபால டி சில்வா உடனடியாக இதற்கான உத்தரவினை வழங்கினார்.

பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டு மருந்துகளை அனுப்புவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சு அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டார்.

அமைச்சருடனான இச்சந்திப்பு நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் உள்ள அவரின் அலுவலகத்தில் நேற்று புதன் கிழமை நடைபெற்றது. (ச)



சிவத்தமிழ் செல்வியின் நினைவாலய திறப்பு விழாவில் நினைவாலயம் திறந்து வைக்கப்படுவதனையும் அன்னையின் திருவுருவச் சிலைக்கு நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் மலர்மாலை அணிவிப்பதையும் சிறுவர் பூங்காவை அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் கைலாசபிள்ளை தம்பதிகள் திறந்துவைப்பதையும் சிறுவர் பூங்காவில் சிறுவர்களின் விளையாட்டு நிகழ்வை அரச அதிபர் க.கணேஷ் ஆரம்பித்து வைப்பதையும் படங்களில் காணலாம்.

# இன்று ஒரு தகவல்

## மனமும் நிறமும்

எனது நண்பர் ஒருவர் வந்தார் மிகவும் இறுக்கமாக உடை அணிந்திருந்தார். 'ஏன்... துணியை குறைவாக எடுத்துவிட்டீர்களா?' என்று கேட்டேன்.

'இல்லை... எனக்கு எப்பொழுதும் இறுக்கமாக உடை அணிவது தான் பிடிக்கும்' என்றார்.

ஒருவர் எப்படி உடை அணிகிறார் என்பதை வைத்தே அவர் எப்படிப்பட்டவர் என்பதைக் கண்டு பிடித்து விடலாம். உடை அணியும் விதம் ஒருவருடைய மனநிலையை வெளிப்படுத்துமாம்!

இறுக்கமான உடை அணிபவர்கள் பொதுவாக மன நிம்மதி இல்லாதவர்களாக இருப்பார்களாம். கோபக்காரர்களாக இருப்பார்களாம்.

தளர்வான உடை அணிபவர்கள் அமைதியானவர்களாக இருப்பார்களாம். இவர்களெல்லாம் போராடுவதற்கு ஏற்றவர்களல்லர்.

அதனால் தான் போர் வீரர்களுக்கெல்லாம் இறுக்கமான உடைதான் கொடுப்பார்களாம். ஆனால் சந்நியாசிகளைப் பாருங்கள். அவர்களுக்கு எல்லாம் தொள தொள உடைகள் தான். அதேபோல் சந்நியாசிகள் காவி உடையைத் தேர்ந்தெடுப்பதற்கும் காரணம் உண்டு.

பல ஆண்டுகள் சோதனை செய்து பார்த்து விட்டுத் தான், சந்நியாசத்துக்குக் காவிதான் சரியென்று முடிவு செய்திருக்கிறார்கள். பௌதீக விஞ்ஞானப்படியும் அதுதான் சரி. சூரிய ஒளியில் ஏழு வர்ணங்கள் உண்டு.

ஒரு பொருள் மீது ஒளிபடும்போது அந்தப்பொருள் நமக்கு சிவப்பாக தெரிந்தால், அது சிவப்பைத் தவிர மற்ற எல்லாக் நிறக்கதிர்களையும் உள்வாங்கி கொண்டு சிவப்பு நிறத்தை மட்டும் வெளிவிடுகிறது.

சிவப்பு காம உணர்வைத் தூண்டக்கூடிய சக்தி வாய்ந்த நிறம். அதே நேரத்தில் உடல் ஆரோக்கியத்திற்கு சிவப்பும் ஓரளவு தேவைப்படுகிறது. அதனால் காவி உடை அணியும் போது சூரிய ஒளி ஓரளவு சிவப்பை விலக்கிவிடும். அதாவது சிவப்பின் பலனும் கிடைக்கும். அதேசமயம் கெடுதலும் இருக்காது. காவி உதயவேளையின் நிறம். கீழ்வானத்தில் சூரியன் உதிக்கும் போது முதல் ஒளியில் காவி நிறம் தான் தெரியும். தியானம் செய்யும் போது முதலில் காணும் ஒளி காவி நிறம்தான். தியானத்தின் உச்ச நிலையின் நிறம் நீலம். தியானம் காவி நிறத்தில் ஆரம்பமாகி நீலநிறத்தில் நிறைவடைகிறது என்கிறார் ஓஷோ.

நீலம் தியான சிகரம். காவி தியான ஆரம்பக் குறியீடு. ஒரு சந்நியாசியின் ஆரம்ப தரிசனம் என்கிறார் ஓஷோ.

ஒருவர் ஒருநாள் முழுவதும் காவி உடை அணிந்திருந்தால் அந்தநிறம் அவருக்கு தியானத்தைப் பற்றிய நினைவை ஊட்டிக் கொண்டிருக்கும். இப்படியே ஆடைக்கும் தியானத்துக்கும் இடையில் ஒரு தொடர் ஏற்படுகிறது. ஒரு துறவியின் உள்ளார்ந்த பண்பாக அது மாறுகிறது.

கடையில் ஒரு பொருள் வாங்கப் போகிறோம். அது மறந்துவிடக்கூடாது என்பதற்காக ஞாபக முடிச்சுப் போட்டு விடுகிறோம். அந்த முடிச்சுக்கும் பொருளுக்கும் தொடர்பில்லை.

ஆனால், கடைக்குப் போனவுடன் அந்த முடிச்சு அந்தப் பொருளை ஞாபகப்படுத்துகிறது. அந்த முடிச்சு ஒரு தொடர்பு அம்சமாக அமைகிறது.

அது மாதிரித்தான் காவி உடையும். ஒரு துறவி நடக்கும் போதும், சாப்பிடும் போதும், குளிக்கும் போதும் அவருடைய காவி உடை அவருக்கு ஞாபகப்படுத்திக் கொண்டே இருக்கும். அது ஒரு நிலைப்படுத்தப்பட்ட நினைவாக ஞாபக முடிச்சாக மாறிவிடுகிறது.

இவ்வளவு தூரம் காவியாடையைப் பற்றி சொல்வதால் எல்லோரும் சந்நியாசியாகப் போக வேண்டும் என்று கருதிவிடக்கூடாது. மனதுக்கும் - நிறத்துக்கும் உள்ள சம்பந்தத்தைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் இவ்வளவும்.

'எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் இருந் தார். ஒவ்வொரு மாதமும் 20 ஆம் திகதி அவரைப் போய்ப் பார்த்தால் காவி உடை அணிந்து கண்ணை மூடி கை இரண்டையும் விரித்து வைத்துக்கொண்டு தியானத்தில் இருப்பார்.

'ஏன் இப்படி செய்கிறீர்கள்?' என்று கேட்டேன்.

'அதாவது 20ஆம் திகதிக்குப் பின்பு என்கையில் ஒரு சதம் கூட இருக்காது. ஒரு சந்நியாசி லெவலில் இருக்கிறேன். என்னிடம் எதுவும் கேட்காதே என்று என் மனைவிக்கு நாசூக்காக உணர்த்துவதற்குத்தான் அப்படி உட்கார்ந்திருப்பேன்' என்று விளக்கம் கொடுத்தார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# க.பொ.த. (சா/த) பெறுபேறுகள் வெளியாவதில் தாமதம் ஏற்படாது

## சபையில் கல்வி அமைச்சர் உறுதி

(கொழும்பு)

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் எக்காரணத்திற்காவும் தாமதமாகாது என்பதுடன் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு அசாதாரணம் ஏற்படாது என்று கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

ஜே.வி.பி.யின் எம்.பி.யான நவரத்ன பண்டார கேட்ட குறுக்கீடு கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பதிலளிக்கையில், க.பொ.த சாதாரண கணித பாடம்(புதிய பாடத்திட்டம்) பரீட்சை எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறவிருக்கின்றது.

விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் ஆரம்பிக்கபட்டுள்ளன. மதிப்பீடுகள் 30 ஆம் திகதி நிறைவடையவிருந்தன எனினும், 31 ஆம் திகதியே நிறைவடையும்.

பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் தாமதமாவது என்பதுடன் 10,11 ஆம் ஆண்டுகளுக்கான சிங்கள இலக்கியத் தொகுப்பில் ஏற்பட்டுள்ள குளறுபடிகள், க.பொ.த. கணிதப் பாட (புதிய பாடத்திட்டம்) வினாத்தாள் பகுதி குளறுபடிகள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (6)

## செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நினைவுப் புலமைப்பரிசில் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

12ஆம் தரத்தில் கல்வி கற்கும் யாழ். வலயத்தைச் சேர்ந்த நூறு மாணவர்களுக்கு துர்க்கா துரந்தரி அமரர் செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி நினைவாக புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது.

இந் நிகழ்வு 10ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வலயக் கல்வி அலுவலக மகாநாட்டு மண்டபத்தில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

புலமைப்பரிசில் பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் பாடசாலைச் சீருடையில் சமூகமளிக்க வேண்டும் எனவும் குறித்த பாடசாலை அதிபர்களையும் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. அ. வேதநாயகம் அறிவித்துள்ளார். (6)

## இராசி பலன்

08.01.2009
(மார்கழி 24, வியாழக்கிழமை)
துவாதசி மாலை 5.09 மணிவரை
ரோகிணி பின்னிரவு 1.42 மணிவரை
இராகுகாலம்-2.02-3.32 மணிவரை
சுபநேரம்-8.02-9.32 மணிவரை
பிரதோஷ விரதம்

| | |
|---|---|
| மேடம் | கல்வியில் ஆர்வம், தனவிரயம், எடுத்த காரியம் தாமதமாகும், மனச்சஞ்சலம். |
| இடபம் | காரிய நன்மை, கூட்டு முயற்சி, நற்கீர்த்தி, மனோதைரியம். |
| மிதுனம் | அதிகசெலவு, ரோகநிலை, மனோசங்கடம், திடீர் நன்மை. |
| கடகம் | வெகுமானம், நல்லமுயற்சி, மாதர் நட்பு, தெய்வசிந்தை. |
| சிங்கம் | பிறருக்கு உதவுதல், சுபசெலவு, உஷ்ணநிலை, காரிய தாமதம். |
| கன்னி | சயன சுகம், தனதானியச் சேர்க்கை, ஆனந்தம், நண்பர்கள் சந்திப்பு. |
| துலாம் | பெரியோரால் மதிக்கப்படுதல், நன்கொடை, காரியசித்தி, ஆரோக்கியம். |
| விருச்சிகம் | புத்திரரால் கவலை, பிரயாணம், பண விரயம், நிலைமாற்றம். |
| தனுசு | காரிய தடங்கல், தர்மம், அபகீர்த்தி, போசன சுகம். |
| மகரம் | தனலாபம், உறவினர் சந்திப்பு, பிறருக்கு உதவுதல், நல்ல முயற்சி. |
| கும்பம் | கீர்த்தி, போசன சுகம், உற்சாகம், காரிய அனுகூலம். |
| மீனம் | முயற்சி தாமதம், தன விரயம், போசன சுகம், தாழ்வு நிலை. |

வளவன்

இன்று ஈழத்து சிதம்பர சௌந்தராம்பிகை சுந்தரேஸ்வரப் பெருமான்
திருவெம்பாவை (ஆம் நாள்) 2009.01.08 வியாழக்கிழமை

## தேசம் வாழ ஐயா! வழி சொல்வாய்


கோவை தந்த வாசகர்க்குக்
குருந்தின் அடியிற் குருவாகி
சாவை யறுக்கும் பேரின்பச்
சாரம் பொழிந்த தனி முகிலே
நாவை அசைத்துன் புகழ்பாட
நயந்து வியந்துன் அடி அடைந்தேன்
தேவை அறிந்து வரம் தருவாய்
தேசம் வாழ ஐயா! வழி சொல்வாய்.

மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன் (2082)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 230 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 |
| பச்சைமிளகாய் | 1000 | 600 |
| தக்காளி | 600 | -- |
| அவரை | 150 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 70 |
| கோவா | 120 | 100 |
| கரட் | 160 | 120 |
| பூசணி | 80 | 70 |
| புடோல் | 160 | 150 |
| வாழைக்காய் | 150 | 50 |
| சின்ன வெங்காயம் | 120 | 70 |
| பெரிய வெங்காயம் | 240 | -- |
| பாகற்காய் | 250 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 110 |
| கரணைக் கிழங்கு | 60 | 40 |
| பயிற்றங்காய் | 200 | 180 |
| லீக்ஸ் | 240 | 250 |
| கீரை - 1 பிடி | 20 | -- |
| போஞ்சி | 300 | -- |
| தேசிக்காய் | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | -- | 35 |

(9)




ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் முன்னாள் இந்து கலாசார அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான அமரர் தி. மகேஸ்வரனின் முதலாம் ஆண்டு சிரார்த்த தினத்தை முன்னிட்டு வடமராட்சியைச் சேர்ந்த மூன்று பின் தங்கிய பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டது. இந் நிகழ்வில் இளைப்பாறிய கடற்றொழில் பரிசோதகர் எஸ். கணபதிப்பிள்ளை மாணவர் ஒருவருக்கு பாடசாலை உபகரணங்களை வழங்குதையும், மேடையில் பருத்தித்துறை பிரதேச செயலர் இ. வரதீஸ்வரன் இளைப்பாறிய அதிபர் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

## சாதாரண தர மாணவர்களுக்கான விசேட வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த சாதாரண தர கணித பாட வினாத் தாள் II மீள்பரீட்சைக்கு தோற்றவுள்ள மாண வர்களுக்கான விசேட வழிகாட்டல் கருத் தரங்கு வலிகாமம் வலயக் கல்விப் பணி மனையால் நடத்தப்படவுள்ளது.

இக்கருத்தரங்குகள் நாளை வெள்ளிக் கிழமை பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலையிலும் 12 ஆம் திகதி திங்கட் கிழமை மானிப்பாய் மகளிர் கல்லூரியிலும் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விக்ரோறி யாக் கல்லூரியிலும் 15 ஆம் திகதி வியாழக் கிழமை வட்டு. இந்துக்கல்லூரியிலும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அருணோதயாக் கல்லூரியிலும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை மல்லாகம் மகா வித்தியாலயத்திலும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இராமநாதன் கல்லூரியிலும் 21 ஆம் திகதி புதன்கிழமை இணுவில் மத்திய கல்லூரியிலும் (ஆரம்பப் பிரிவு) நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணி தொடக்கம் 1.30 மணி வரை நடைபெறும் இக்கருத்தரங்கிற்கு பாட சாலை சீருடையுடன் வரும் மாணவர்கள் மாத்திரமே அனுமதிக்கப்படுவர் என அறி வுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் மாணவர்கள் வருகை தரும் போது நடைபெற்ற கணிதபாட வினாத்தாள் II ஐயும் இவ் வினாத்தாளுக்கு விடையளிக்க முயற்சி செய்த விடைத்தாளையும் எடுத்து வருவதை ஆசிரியர்கள் உறுதிப்படுத்து மாறும் வலிகாமம் வலயக்கல்விப் பணிப் பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (6)

## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மேற்கு பெருங்காடு மதுரை யம்பதி ஸ்ரீ மீனாட்சி அம்பாள் சமேத சோமசுந்தரேஸ்வரர் திருக்கோவில் திருவாச முற்றோதல் விழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு புங்குடுதீவு இறுப்பிட்டி அரியநாயகம் புலம் வீரகத்தி விநாயகராலய மாணிக்கவாசக சுவாமி மடாலய சபை செயலாளர் க.திருலோகநாதன் தலைமை யில் நடைபெறவுள்ளது. (6-4)

■■■

புலோலி வட மேற்கு வில்லிபாதி முருகன் ஆலயத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை காலை 7 மணிக்கு திருவாசக முற்றோதல் நிகழ்வு இடம்பெறும். (6-35)

## யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

தொழில்நுட்ப கல்வி பயிற்சித் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தலின் படி, யாழ். தொழில் நுட்பக் கல்லூரி யின் புதிய தவணை வகுப்புக்கள் யாவும் எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக தொழில் நுட்பக் கல்லூரி பணிப்பாளர் ந. யோகராஜன் தெரிவித்துள்ளார். (6-7-10)

## ஆன்மீக சொற்பொழிவு

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமம் சைவகலை பண்பாட்டு பேரவை யினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வு தொட ரில் அடியார்கள் என்னும் தலைப்பில் சமூர்த்தி உத்தியோகத்தர் ரி. கருணாகரன் ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். (6-35)

## நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வடக்குமாகாண பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்ற யாழ்.மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவையின் அங்குரார்ப் பணக் கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

போஷகர்களாக யாழ்.பிராந்திய ஆணை யாளர் திருமதி ப.சிவலிங்கம், மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் ஆ.ஞானவேல், திட்ட இணைப்பாளர் த .கிருபாகரன் ஆகியோரும் தலைவராக ச.சிவகுமாரன்,உபதலைவராக சி.வி.ஆறுமுகசாமி,கௌரவ செயலாளராக லயன் வல்லிபுரம் பரமசிவம், உபசெயலா ளராக திருமதி ட. ஜெயமணி யோசப், பொரு ளாளராக ஏ.ரி.பேரின்பநாதன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் நிர்வாக சபை உறுப்பினர் களாக து.சீவரட்ணம்,கீதபொன்கலன், செ. முத்துநாயகம், வ.செல்வரட்ணம், இ.தர்ம ரட்ணம், ஜ.பெருமாள், சி.மார்க்கண்டு, ச. தேவதாசன்,செ.சிவ ஞானசுந்தரம், ந.தர்ம லிங்கம் ஆகியோரும் கணக்கு பரிசோதகராக க.பழனிமலைநாதனும் தெரிவு செய்யப்பட்ட னர். (6-2)

## திருவாசக விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட — பண்ணிசைப் போட்டி முடிவுகள் —

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதி யான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவையினால் திருவாசக விழாவை முன் னிட்டு நடாத்தப்பட்ட பண்ணிசைப் போட்டி முடிவுகள் வருமாறு,

*தரம் 5,6* **சிவபுராணம்**

ஜா.சந்திரநாதன்-இராமநாதன் கல்லூரி (முதலாம் இடம்), ரா.ஜன்மதன்ராஜா-ஹாட் லிக் கல்லூரி (இரண்டாம் இடம்), கீர்த்தனா சுகேந்திரன்-உடுவில் மகளிர் கல்லூரி (மூன்றாம் இடம்).

*தரம் 7,8* **திருவெம்பாவை**

வி.சர்மிளா-உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, செ.பிருத்திகா-கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி (முதலாம் இடம் இருவர்) , தே.அஜ் வரியா-வட இந்து மகளிர் கல்லூரி (இரண் டாம் இடம்), இ.வளர்மதி -இராமநாதன் கல்லூரி (மூன்றாம் இடம்).

*ஆண்டு 9,10,11*

**திருப்பள்ளியெழுச்சி**

ச.சக்தி தர்சினி-ஸ்கந்தவரோதயக் கல் லூரிஜெ.தேவரூபி(இராமநாதன் கல்லூரி (முதலாமிடம் இருவர்), நா.தேனுகா-கரவெட்டி வட மத்திய மகளிர் கல்லூரி(இரண்டாம் இடம்), ஜெ.நாகசிந்தா-இராமநாதன் கல்லூரி (மூன்றாம் இடம்).

இவர்களுக்கான பரிசுகள் கடந்த 2 ஆம் திகதி நடைபெற்ற திருவாசக விழாவில் வழங் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (6-35)

## தேசிய டிப்ளோமா பயிற்சிநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில்நுட்பக் கல்லூரி, யாழ். தொழில் நுட்பவியல் கல்லூரி, இரத் மலானை தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், வாழ்க்கைத் தொழில், தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் ஆகியன இணைந்து தேசிய டிப்ளோமா தர பயிற்சிநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தற்போது க.பொ.த உயர்தர 2அல்லது 3 பாடங்களில் சித்தியெய்திய மாணவர்களின் நன்மை கருதி விசேட பயிற்சி நெறிகளைப் பயில்வதற்கான விசேட அனுமதி பெறப்பட் டுள்ளதாகவும் மாணவர்கள் இச் சந்தர்ப் பத்தைப் பயன்படுத்துமாறும் யாழ். தொழில் நுட்பக் கல்லூரி பணிப்பாளர் என். யோக ராஜன் கேட்டுக்கொண்டுள்ளார்.

பயிற்சி நெறிகள் விபரம் வருமாறு,

தேசிய டிப்ளோமா தர கணிய அளவியல் (Dipoma in Quantity Surveying),

தேசிய டிப்ளோமா தர குடிசார் எந்திரவியல் (Diploma in Civil Engineering).,தேசிய டிப்ளோமா தர மின்னியலும் இலத்திரனி யலும் (Diploma in Electrical & Electronic),சான்றிதழ் தர தன்னியக்க எந்திரவியல் (Certificate in Automobile), டிப்ளோமா தர தன்னியிக்க எந்திரவியல் (Diploma in Automobile),உயர்தர வர்த்தக துறை ஆங்கிலம்(Advanced Certificates in Commercial English),டிப்ளோமா தர வர்த்தகமும் சந்தைப்படுத்தலும்(Diploma in Marketing),டிப்ளோமா தர கணக்கியல் (Diploma in Accountancy),டிப்ளோமா தர ஒப்பனைக் கலை (பரதநாட்டியம்)(Diploma in Makeup Art),டிப்ளோமா தர மனை யியலும் வீட்டு உள்ளக அலங்காரமும் (Diploma in Home Science) (6-7-19)

## காரைநகர் மணிவாசகர் சபை நடத்தும் மணிவாசகர் விழா

### நான்காம் நாள் நிகழ்வுகள்

(காரைநகர்)


காரைநகர் மணிவாசகர் சபை நடத்தும் மணிவாசகர் விழாவின் நான்காம் நாள் நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை இரவு 9மணிக்கு காரைநகர் மணிவாசகர் சபை தலைவர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நிர்வாக உறுப்பினர் தி.சண்முகசுந்தரம் திருவாசகத் திருமுறை ஓதவுள்ளார்.

வரவேற்புரையினை நிர்வாக உறுப்பினர் க.சிவஸ்ரீ சாந்திநாயகமும் ஆசியுரையை காரைநகர் மணிவாசகர் சபை போஷகர் கலாநிதி. சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக் குருக்களும் வழங்கவுள்ளனர்.

அத்துடன் காரைநகர் கிழவன்காடு கலா மன்றம் வழங்கும் பண்ணிசையும், சபைப் போட்டியில் முதலிரு இடங்களைப் பெற்றவர் களின் நிகழ்சியும் இடம்பெறும்.

"திருச்சிற்றம்பலத்துள் ஈசனார்க்கு யாம் ஆர்" எனும் தலைப்பில் வலிமேற்கு பிரதேசச சபை நிர்வாக உத்தியோகத்தர்களும் காரை நகர் மணிவாசகர் சபை உபதலைவருமாகிய பாலபண்டிதர் க.பாலசுப்பிரமணியம், "கருணை யாளனே போற்றி" எனும் தலைப்பில் செல்வன் விசுவநாதன் பாலேந்திரன் ஆகியோர் சொற் பொழிவாற்றவுள்ளனர். அத்துடன் செல்வி ரஜித்தா சின்னத்துரை தயாரித்து வழங்கும் பல்லோருமேத்தப்பணிந்து நிருத்தியார்ப் பணமும் இடம்பெறும். (6-4)




## யாழ்.செய்திகள்

### யாழ்.இந்து மாமன்றத்தின்

## புதிய மாடிக் கட்டட திறப்புவிழா நாளை


(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்துமாமன்றத்தின் ஏற்பாட்டில் கோவில் வீதி நல்லூரில் அமைந் துள்ள யாழ்ப்பாணம் இந்துமாமன்ற மாடிக் கட்டடத் திறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை9மணிக்கு செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கட்டடத்தின் வரவேற்பு வாயிலை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளும், பிரதான மண்டபத்தை அகில இலங்கை இந்து மாமன்ற தலைவர் வி.கயிலாசபிள்ளை தம்பதி களும், இந்து ஆராய்ச்சி நூலக மண்டபத்தை அகில இலங்கை இந்துமாமன்ற செயலாளர் கந்தையா நீலகண்டன் தம்பதிகளும், இந்து பிரச்சாரகர் பயிற்சி மண்டபத்தை ஹவாய் சைவ ஆதீன ஆன்மீக அன்பர் ரிஷி தொண்டு நாதசுவாமிகளும் திறந்து வைக்க வுள்ளனர்.

இந்நிகழ்வில் வரவேற்புரையை அகில இலங்கை இந்துமாமன்ற உபதலைவர் பேராசிரியர் சண்முகதாஸ் நிகழ்த்துவார். (6)






ஜீவநதி கலை இலக்கியச் சஞ்சிகையின் சிறுகதைச் சிறப்பிதழ் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் அல்வாய் கலையகத்தில் இடம்பெற்றபோது மூத்த எழுத்தாளர் தெணியான், ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் கல்யாணி நமசிவாயம், ஜீவநதி ஆசிரியர் க.பரணீதரன் ஆகியோர் உரையாற்றுவதையும். நிகழ்வில் கலந்துகொண்ட இலக்கியச் சுவைஞர்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# இலங்கையில் தமிழர் 34

பேராசிரியர்
கா. இந்திரபாலா

## ஆதி இரும்புக் காலம்

கதிரவெளியின் கற்கிடை அடக்கங்கள் வெளிப்படுத்தும் ஆதி இரும்புக்காலப் பண்பாட்டின் செல்வாக்குத் தென்னிந்தியாவின் தமிழ்நாட்டுப் பகுதியிலிருந்து மட்டுமின்றி, ஆந்திரா மற்றும் கேரளம் ஆகிய இடங்களிலிருந்தும் வந்திருக்க முடியும். கேரளத்தில் இப்படியான கற்கிடை அடக்கங்கள் கொச்சிப் பகுதியில் காணப்படுகின்றன.

எருகாமம் என்னும் இடத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெருங்கற்களுடன் கூடிய சில அடக்கங்கள் இருந்தமை அறிவிக்கப்பட்டது. இவை போன்ற தொல்லியல் தலங்கள் முறையாக ஆய்வு செய்யப்படாது இருப்பதால் திட்டவட்டமாக இவற்றை ஆதி இரும்புக்காலத்துடன் தொடர்புபடுத்துவது இலகுவான செயலாகாது. எனினும் மட்டக்களப்புக் கரையோரத்தில் ஆதி இரும்புக் காலப் பண்பாட்டின் செல்வாக்குப் பரவியிருந்தது என்பதை மறுக்க முடியாது.

### அம்பாறை மாவட்டம்

கிழக்குக் கரையோரத்தில் பரவலாகத் தெற்கு நோக்கி ஆதி இரும்புக் காலப் பண்பாடு தென்னிந்தியாவிலிருந்து பரவியதற்கு அம்பாறை மாவட்டத்திலும் அப்பால் தென் மாகாணத்திலும் சான்றுகள் கிடைக்கின்றன. நதிகள் வழியாக உள்நாட்டுக்கு இப்பண்பாடு பரவியதைக் காட்டும் வகையில் நதிக் கழிமுகப் பகுதிகளில் இப்பண்பாட்டுக்குரிய சான்றுகள் காணப்படுகின்றன.

அம்பாறை மாவட்டத்தின் தென் எல்லையாக அமையும் கும்புக்கன் ஓய என்னும் ஆற்றுக்கு வடக்கே பல இடங்களில் ஆதி இரும்புக் காலத்திற்குரிய கரும் - செம் மட்பாண்ட ஓடுகள் கிடைத்துள்ளன. மேலும் வடக்கு நோக்கிக் கிழக்குக் கரை வழியே சென்றால் பானமப் பகுதியில் இத்தகைய கரும் - செம் மட்பாண்ட ஓடுகள் இருப்பதைக் காணலாம். பானமத்துக்குத் தெற்கே ஓகந்த என்னும் இடத்திலும் பெருங்கற்களைக் கொண்ட அடக்கங்கள் இருப்பதற்கான அறிகுறிகள் 1920 களில் அறியப்பட்டிருந்தன. இலங்கையின் கிழக்குக் கரை, வடமேற்குக் கரையைப் போலவே, தென்னிந்தியச் செல்வாக்கின் பரம்பலுக்கு ஆதி இரும்புக் காலத்தில் இலக்காகி இருந்தது என்பதை மறுக்க முடியாத வகையில் சான்றுகள் காட்டுகின்றன. இவற்றுடன் கிழக்கு இலங்கையில் காணப்படும் பிராமிக் கல்வெட்டுக்களைத் தொடர்புபடுத்தி முக்கியமான குடியிருப்புகள் இருந்த இடங்களை அடையாளங் காணலாம்.

ஆதி இரும்புக் காலச் சவ அடக்கங்கள் காணப்படும் இடங்களுக்குக் கிட்டிய இடங்களில் மிகப் பழைய பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுவது கவனிக்கத்தக்கது. அம்பாறை மாவட்டத்தில் அப்படியான ஒரு கல்வெட்டுச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இக் கல்வெட்டில் தமிழ்ப் பெண் ஒருத்தி குறிப்பிடப்பட்டுள்ளாள். இக்கல்வெட்டு அக்கரப்பத்துப் பகுதியில் குடுவில் என்னும் இடத்தில் உள்ளது. பிராகிருதத்தில் தமெட என்றழைக்கப்பட்ட தமிழ் மக்கள் அக்கரைப்பத்துப் பகுதியில் 2000 ஆண்டுகளுக்கு முன் இருந்தமைக்கு இது சான்று பகருகின்றது.

### வடக்கு இலங்கை

*யாழ்ப்பாண மாவட்டம்*

1975 ஆம் ஆண்டளவில் திட்டவட்டமாக ஆதி இரும்புக்காலத்தை சேர்ந்த சவ அடக்கம் என்று அடையாளம் கண்டு கொள்ளப்பட்ட தொல்லியல் தலம் எதுவும் யாழ்ப்பாண மாவட்டத்தில் கண்டு பிடிக்கப்பட்டு இருக்கவில்லை. ஆனால், கடந்த முப்பதாண்டுக் காலத்தில் பெருந்தொகையான ஆதி இரும்புக்காலத் தொல்லியல் தலங்கள் கண்டறியப்பட்டுள்ளன. எனினும், யான் ஓய அடக்கங்களை ஒத்த கற்படை அடக்கங்களோ, பொம்பரிப்பு அடக்கங்களை ஒத்த தாழி அடக்கங்களோ இங்கு இதுவரை காணப்படவில்லை. தாழி அடக்க முறை கடைப்பிடிக்கப்பட்டதற்கான சான்றுகள் சில இடங்களில் கிடைத்துள்ளன. பல இடங்களில் இப் பண்பாட்டுக்குரிய கரும் - செம்மட்பாண்ட ஓடுகள் கிடைத்துள்ளன.

*கந்தரோடை*

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள தொல்லியல் தலங்களுள் மிகப் பழையது மட்டுமின்றி மிகப் பிரசித்தியுடைய இடம் கந்தரோடை ஆகும். நீண்ட காலமாகக் கந்தரோடையின் வரலாற்று முக்கியத்துவம் பொதுவாக அறியப்பட்டிருந்தாலும், முதன் முறையாக 1970 இலே தான் முறையான தொல்லியல் அகழ்வாய்வு ஒன்று அங்கு நடத்தப்பட்டது. இந்த ஆய்வு அமெரிக்கப் பென்ஸில்வேனியாப் பல்கலைக்கழகத்து அரும் பொருளகத்தின் தலைமையில் நடத்தப்பட்டது. அறிவியல் அடிப்படையிலான அகழ்வாய்வாக அமைந்தாலும் இந்த ஆய்வின் முறையான அறிக்கை வெளியிடப்படவில்லை. எனினும், இங்கு கிடைக்கப் பெற்ற பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்ட ஓடு ஒன்று பற்றிய தகவல் மற்றும் இந்த ஆய்வு மூலம் பெறப்பட்ட காலக் கணிப்புகள் பற்றிய தகவல் ஆகியவை வெளியிடப்பட்டுள்ளன.

*ஆனைக்கோட்டை*

ஆதி இரும்புக் காலத் தலங்களுள் கந்தரோடைக்கு அடுத்ததாக முக்கியத்துவம் பெற்றுள்ள இடம் ஆனைக்கோட்டை எனலாம். இவ்விடத்தில் 1980இல் முக்கியமான ஒரு சவ அடக்கமும் பிராமி எழுத்துப் பொறித்த முத்திரை ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டன. இங்கு அடக்கம் பெற்றுள்ளவர் ஒரு குறுநிலத் தலைவனாக அதிகாரம் செலுத்தியதுடன், வணிக நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தமைக்கு அவரது முத்திரை சான்றாக உள்ளது. இதன் அடிப்படையில், இவர் அடக்கம் செய்யப்பட்டுள்ள ஆனைக்கோட்டைப் பகுதி ஒரு குறுநிலத் தலைவனின் அதிகார பீடமாக இருந்திருக்கலாம் என்று ஊகிக்க இடமுண்டு. அல்லது, கந்தரோடையை அதிகார பீடமாகக் கொண்ட குறுநிலத் தலைவன் ஆனைக் கோட்டப் பகுதியில் வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான துறை ஒன்றைத் தன் ஆணைக்கு உட்படுத்தியிருக்கலாம்.

*யாழ்ப்பாணத் தீவுகள்*

இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன் குடியிருப்புகள் காணப்பட்ட இடங்களுள் யாழ்ப்பாணத் தீபகற்பத்துக்கு மேற்கில் உள்ள தீவுகள் குறிப்பிடத்தக்கவை. இதற்குத் தொல்லியல் சான்றும் இலக்கியச் சான்றும் கிடைக்கின்றன. பாளி மொழியிலுள்ள ஜாதகக்கதைகளில் காரதீப, நாகதீப ஆகிய தீவுகளுக்கு இந்தியத் துறைகளிலிருந்து வணிகர் வந்து சென்றமை பற்றிய தகவல் காணப்படுகிறது. காரதீப என்பது காரைதீவு, நாகதீப என்பது பொதுவாக யாழ்ப்பாணத் தீபகற்பத்தைக் குறிக்கும். காரைதீவு என இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை வழங்கப்பட்ட தீவு இன்று காரைநகர் என்ற பெயர் மாற்றம் பெற்றுள்ளது. இத்தீவில் 1980-82 காலப் பகுதியில் பொ. இரகுபதி ஆதி இரும்புக் காலத் தொல்லியல் தலங்கள் சிலவற்றை அடையாளம் கண்டார். குறிப்பாக, சத்திரந்தை என்னும் இடத்தில் சில முக்கிய தடயங்கள் கிடைத்துள்ளன. வேலணைத்தீவிலும் ஆதி இரும்புக் காலத் தொல்லியல் தலங்கள் ஆய்வு செய்யப்பட்டன. இவற்றுள் சாட்டி, கும்புறுப்பிட்டி ஆகிய இடங்களில் கிடைத்த சான்றுகள் குறிப்பிடத்தக்கவை. சாட்டியில் 2004 ப. புஷ்பரட்ணம் மேலும் சில அகழ்வாய்வு நடத்திச் சவ அடக்கங்கள் சிலவற்றை வெளிப்படுத்தியுள்ளார். மஹாவங்ஸ நூலில் பியங்கு தீப எனப்படும் தீவு இன்றைய புங்குடுதீவு என்று கொள்ள இடமுண்டு.

இங்கும் ஆதி வரலாற்றுக் காலத் தொல்லியல் சான்றுகள் காணப்படுகின்றன. இது வரை ஆதி இரும்புக் காலச் சவ அடக்கங்கள் அங்கு கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இதே போல நெடுந்தீவும் ஆதி வரலாற்றுக் காலத் தொல்லியல் தடயங்களை மறைத்து வைத்திருக்கும் ஒரு தீவாகும். இங்கும் ஆதி இரும்புக்கால அடக்கங்கள் அல்லது மட்பாண்ட ஓடுகள் வெளிப்படலாம். (தொடரும்)

# இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகால தமிழ்ப் பத்திரிகைகளும் - யாழ்ப்பாணமும் 9

திருமதி சோ. கிருஷ்ணகுமார்
சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

எல்லாப் பத்திரிகைகளும் பிறதேச வர்த்தமானங்களை வழங்குவதில் கவனம் செலுத்தியிருந்தன. காபூல் யுத்தம் ரஷ்ய மாற்றங்கள், ஐப்பானில் வெளிநாட்டுப் பொருட்களின் தீர்வை அதிகரிப்பு, இந்திய தேசிய காங்கிரஸின் செயற்பாடுகள் எனப் பலதரப்பட்ட விடயங்களும் செய்திகளாகப் பதியப்பட்டுள்ளன. பிரித்தானிய நாட்டு விடயங்கள், பிரித்தானிய சாம்ராஜ்ய விடயங்கள் எழுதப்பட்டுள்ளன. பிரித்தானிய அரசர் மகாராணி ஆகியோரின் முடிசூட்டுவிழா, ஆரோக்கியம் பற்றிய விடயங்கள் விசுவாசத்துடன் எழுதப்பட்டுள்ளன. அத்துடன் சமயம்,மொழி சார்ந்த கருத்துப் பரிமாறல்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருந்தன.

இப்பத்திரிகைகள் வட இலங்கை மக்களின் சமகால அரசியல், பொருளாதார, சமய சமூக விடயங்கள் குறித்த தகவல்களையும், கருத்துக்களையும், கட்டுரைகளையும் வெளியிட்டிருந்தன இப்பத்திரிகைகளில் பெரும்பாலானவை. சமய, சமூக வர்க்க நலன்களை அடிப்படையாகக் கொண்டவையாகவும், சில தனிப்பட்ட தேவைகளை அடிப்படையாகக் கொண்டவையாகவும் அமைந்திருந்தன.

முன்னதாகவே ஆரம்பிக்கப்பட்டு, வெளியிடப்பட்டு வந்த 'இந்து சாதனம்' போன்ற பத்திரிகைகளும், கால மாற்றத்திற்கு ஏற்ப உலகியல் சார்ந்த விடயங்களையும் வெளியிடும் பத்திரிகையாக மாற வேண்டியதாக இருந்தது. இதனை, மற்றைய பத்திரிகைகள் ஆங்காங்கே சுட்டிக் காட்டியுமுள்ளன. முதலில் ஆரம்பிக்கப்பட்ட உதயதாரகை, கத்தோலிக்கப் பாதுகாவலன், இந்து சாதனம் ஆகிய பத்திரிகைகளுக்கிடையில் பல வேறுபாடுகள் காணப்பட்டாலும், அவை அக்கால வட இலங்கையின் கல்வி கற்ற மேல்தட்டு வகுப்பாரினால் ஒருவித அமைப்பு ரீதியாக நடத்தப்பட்டவையாக இருந்தன எனக் கூறுவதில் தவறிருக்காது.

### பத்திரிகைகளில் வெளியான விளம்பரங்கள்

இப்பத்திரிகைகளில் பெரும்பாலனவை அதிகளவு வர்த்தக விளம்பரங்களைக் கொண்டு காணப்பட்டன. விளம்பரங்களுக்கான கட்டண விபரங்கள் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டிருந்தன. யாழ்ப்பாணத்தில் விற்பனையாகும் பொருட்களுக்கான விற்பனை பற்றிய விளம்பரங்கள் மாத்திரமன்றி, மட்டக்களப்பு வியாபாரப் பொருட்களின் விளம்பரங்களும், வெளிநாட்டு விற்பனை நிலையங்களின் விளம்பரங்களும் பெரிய அளவில் இடம்பெற்றிருந்ததைக் காணக் கூடியதாக உள்ளது. இவ் விளம்பரங்களில் சிறப்பான கவனத்தை ஈர்ப்பனவாக அமைந்துள்ளவை தங்க மாத்திரிகை, சலாமிரிசி லேகியம் போன்றவற்றின் விளம்பரங்கள் ஆகும். அதற்கான நியாயம் என்னவெனத் தெரியவில்லை. எல்லாப் பத்திரிகைகளும் எல்லா விளம்பரங்களை யும் பிரசுரிப்பதற்குத் தயாராக இருந்தன எனக் கூற முடியாது. சில பத்திரிகைகள் விளம்பரங்களைப் பிரசுரிப்பதில் கண்டிப்பாக நடந்துள்ளன. தமது பத்திரிகையின் எண்ணத்திற்கு மாறான விளம்பரங் களை மீளப் பெறுவதற்கும் விளம்பரதாரர்களுக்கு அறிவு றுத்தியிருந்தன.

இக்காலப் பத்திரிகைகளில் தனியார்களின் திருமண, தேகவியோக விளம்பரங்களும் இடம் பெற்றிருந்தன. இந்திய வர்த்தக விளம்பரங்கள் அதிக அளவில் இடம் பெற்றிருந்தன. சில பத்திரிகைகளில் இவ்வர்த்தக விளம்பரங்கள் முதற்பக்கம் முழுவதிலும் அமைக்கப்பட்டும் காணப்படுகின்றன. அதிகப்படியான நூல்களின் வருகை, நூல்களின் விற்பனை பற்றிய விளம்பரங்களும் காணப்படுகின்றன.

### *பத்திரிகைகள் வாயிலாக நாம் அறியக் கூடிய விடயங்கள்*

ஆனால், இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலங்களில் வெளிவந்த பத்திரிகைகளில் பெரும்பாலானவை, இடைநிலைப் பட்ட வகுப்பினரால் நடத்தப்பட்டவையாக உள்ளன. அதாவது ஓரளவு ஆங்கிலம் தெரிந்த அல்லது ஆங்கிலம் தெரியாத வகுப்பினரால் நடத்தப்பட்டன. முன்னையவர்களின் நோக்கம், சிந்தனை என்பவற்றில் இருந்து, பின்னையவர்களின் நோக்கம், சிந்தனை ஆகியவை வேறுபட்டவையாக இருந்தன. இவர்களில் சிலரிடம் தமிழ் மொழியில் சிறந்த தேர்ச்சி இருந்தது. ஆங் கில மோகம், மேலைத்தேச நடை, உடை, பாவனை ஆகியவற்றிற்கெதிரான உணர்வு இவர்களின் எழுத்துக்களில் காணப்பட்டது. அது மட்டுமன்றி, உயர் வகுப்பாரிற்கு எதிரான எண்ணங்களும் இவர்களிடமிருந்தது. தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்ற புலமையா ளர்களின் மேன்மைகளையும், உயர் வகுப்பாரால் அவர்களுக்கு ஏற்படக் கூடிய நியாய மற்ற செயற்பாடுகளையும் கண்டிப்போரா கவும் இருந்தனர். இவர்கள் மேல் தட்டு வகுப்பார்களில் ஒரு பகுதியினரின் ஆதரவினைப் பெற்றிருந்தார்கள் என்பதும் உண்மையானதாகும்.

இருபதாம் நூற்றாண்டின் யாழ்ப்பாணத்தினது உண்மையான தோற்றப்பாட்டினைக் காட்டும் கண்ணாடியாக, இந்தப் பத்திரிகைகள் காணப்படுகின்றன. அக்கால மக்களின் பொருளாதார விடயங்கள், வாழ்க்கை முறை, பழக்கங்கள், வாழ்க்கைத்தரம், சமூகத்தின் பல்வேறு பிரிவினர் மத்தியில் காணப்பட்ட உறவுகள், முரண்பாடுகள், சமய, பண்பாட்டுநிலை, புதிய மாற்றங்கள், நம்பிக்கைகள், கலைகள், விளையாட்டுக்கள், பொழுது போக்குகள், அடித்தட்டு மக்களின் நிலை எனச் சமூகத்தின் சகல அம்சங்களையும் இப்பத்திரிகைகள் வாயிலாகப் புரிந்து கொள்ள முடியும்.

சமூகத்தின் மேல் வகுப்பு நிலையினரும், இடைநிலை வகுப்பினரும் அடித்தட்டு மக்களைப் பற்றிக் கொண்டிருந்த தொடர்புகள் அதிக கவனத்தை ஈர்ப்பனவாக உள்ளன. பொருளாதார சமூக அந்தஸ்து அடிப்படையில் அடித்தட்டினராகத் தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்கள் இருந்தனர் என்பதில் ஆச்சரியமோ, கருத்து வேறுபாடோ இருப்பதற்கு இடமில்லை. சட்டத்தின் முன் சமனென்றாலும் தாழ்த்தப்பட்டவர்கள் பற்றிய மனப்பாங்கைப் பொறுத்த வரையில், மேல் வகுப்பினரும் இடை நிலை வகுப்பினரும் தாழ்த்தப்பட்டவர்களைத் தனியாகவும், பொது இடங்களிலும், பத்திரிகைகளிலும் சாதி அடையாளத்தின் அடிப்படையில் பச்சையாகக்கூறும் போக்கே காணப்பட்டது. உதாரணம் அக்காலத்தில் ஒவ்வொருவரின் அ டையாளமும் தனி மனித அடையாளமாக அல்லாது, பிறப்பினாற் பெறப்பட்ட குழு நிலை அடையாளங்களே மேலோங்கியிருந்தன. இத்தகைய நிலை 1930களின் பின் வந்த ஈழகேசரிப் பத்திரிகையிலும் காணக் கூடிய ஒன்றாகும். இத்தகைய பண்பு கீழ்த்தட்டு மக்களுக்கு மட்டுமன்றி, மேல் தட்டு வகுப்பினருக்கும் உரியதாகும். (தொடரும்)

# முல்லைத்தீவிலுள்ள தமிழர்கள் வெளியேறும் வரை தாக்குதலை நிறுத்துமாறு நிர்ப்பந்திக்க வேண்டும்

## தினமணி ஆசிரியர் தலையங்கம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கைத் தமிழர் மீது தமிழக அரசியல் கட்சிகளுக்கு அக்கறையிருந்தால் முல்லைத் தீவிலுள்ள தமிழர்கள் வெளியேறும் வரை தாக்குதலை நிறுத்துமாறு இந்திய அரசு மூலம் இலங்கை அரசாங்கத்தினை நிர்ப்பந்திக்க வேண்டும் என்று தமிழகத்திலிருந்து வெளிவரும் தினமணி நாளேடு தனது ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக் காட்டியுள்ளது. தமிழர்களை இப்போது காப்பாற்றிவிட்டால் எப்போதும் காப்பாற்ற முடியாது. அப்படியான நிலை ஏற்படும் போது தமிழகத்தில் நடந்த உண்ணா விரதம், கடையடைப்பு, ஆர்ப்பாட்டங்கள், அறிக்கைகள், அனைத்துக் கட்சிக் கூட்டங்கள், அதன் தீர்மானங்கள், பிரதமருடனான சந்திப்பு என அனைத்துமே விழலுக்கு இறைத்த நீராகி விடும் என்றும் அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தினமணி நாளேட்டின் ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை இராணுவம் முன்னேறிக் கொண்டே இருக்கிறது. தமிழகத்தில் இலங்கைத் தமிழருக்க ஆதரவாக ஒலித்த குரல்கள் ஓய்ந்து கொண்டே இருக்கின்றன. பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ்,பழ. நெடுமாறன் இருவருடைய குரல்கள் மட்டுமே ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அவையும் திருமங்கலம் சட்டப் பேரவைத் தொகுதி இடைத்தேர்தல் கூச்சலில் காணாமல் போய்விட்டன.

இந்த முரண் நியாயமானதாகத் தெரியவில்லை. ஏனென்றால் ஒரு இலட்சம் இலங்கைத் தமிழர்கள் என்ன ஆனார்கள் என்றே தெரியவில்லை. அவர்களுக்கு திரட்டப்பட்ட நிதி, உதவிப்பொருள்கள் என்னவாயிற்று? தமிழக முதல்வருக்கு இலங்கை அதிபர் விடுத்த அழைப்பு என்ன ஆயிற்று? பதில் வராத கேள்விகள் நிறையவுள்ளன.

திருமங்கலம் தொகுதி இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் முதலாக இலங்கைத் தமிழர் பிரச்சினை ஒட்டுமொத்தமாக பின்னுக்குத்தள்ளப்பட்டு விட்டது. தேர்தல் முடிவு வெளியாகும் வரை யாரும் கவலைப்படப் போவதில்லை. திருமங்கலத்தில் வெற்றிவிழா கொண்டாப்படும்போது ஒருவேளை. இலங்கை இராணுவமும் வெற்றி விழா கொண்டாடினாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. அவ்வளவு வேமாக இலங்கை இராணுவம் முன்னேறிக் கொண்டிருக்கிறது.

சுமார் ஒரு இலட்சம் தமிழர்களை விடுதலைப் புலிகள் பலவந்தமாக முல்லைத் தீவுக்கு இடம் பெயரச் செய்துள்ளனர். கிளிநொச்சியில் தெருவில் சுற்றித் திரியும் நாய்கள், சில மாடுகள் தவிர மனித வாசமே இல்லை என்று இலங்கை இராணுவம் சொல்கிறது.

இலங்கை இராணுவம் முன்னேறிச் செல்லும் பாதைகளில் தமிழர்களே காணப்படவில்லை என்றால் நிவாரணப் பொருள்களை யாருக்கு அளிக்கிறது இலங்கை அரசு? புரிய வில்லை இந்த நிலையிலும் கூட 'தமிழர்களுக்கு உணவு கொடுத்துக் கொண்டிருக்கிறோம். விடுதலைப் புலி களுக்கும் உணவு போய்க்கொண்டிருக்கிறது' என்கிறார் இலங்கை அதிபர் ராஜபக்ஷ. அதாவது சாப்பாடு போட்டு சண்டை போடுறோம் என்கிறார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கைவசம் இருந்த கிளிநொச்சி, இலங்கை இராணுவத்தின் ஆளுகைக்கு வந்து விட்டது. அடுத்து ஆனையிறவு பகுதியும் கைப்பற்றப்படும். முல்லைத்தீவை அடுத்து ஓரிரு வாரங்களில் கைப்பற்றி விடுவோம் என்று இலங்கை இராணுவம் நம்புகிறது.

முல்லைத்தீவு விடுதலைப் புலிகளின் கடைசி இடமாக இருக்கும். இங்கு நடைபெறும் போர் மிக மோசமானதாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் இப்போது முல்லைத்தீவில் இருக்கும் தமிழர்கள் கதி என்ன என்பது தான் கேள்விக் குறியாகவுள்ளது.

முல்லைத்தீவில் நடக்கவிருக்கும் போர் கண்மூடித்தனமாக உலக நாடுகளின் விமர்சனங்கள் பற்றிய கவலைகள் இல்லாத போராகத் தான் இருக்கும். இலங்கை அரசு 25 ஆண்டுகளாக காட்ட முடியாத கோபத்தீயின் வெளிப்பாடாக அமையும்.

இஸ்ரேல் இராணுவம் காஸா நகரில் ஹமாஸ் தீவிரவாதிகளுடன் நடத்தும் போரில் 87 குழந்தைகள் உட்பட அப்பாவிப்பொது மக்கள் 517 பேர் இறந்துள்ளனர்.

2ஆயிரத்து 500க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இது முல்லைத்தீவிலும் நடக்கும். விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை இராணுவத் துக்கும் இடையிலான இந்தப் போரில் தமிழர்கள் வெளியேற அனுமதிக்கப்படாவிட்டால் நிச்சயமாக பல ஆயிரம் தமிழர்கள் இந்தப் போரில் இறக்க நேரிடும்.

தமிழக அரசியல் கட்சிகளுக்கு உண்மையிலேலே இலங்கைத் தமிழர் மீது அக்கறை இருந்தால் இப்போது முல்லைத்தீவில் உள்ள தமிழர்கள் வெளியேறும் வரை இலங்கை இராணுவம் தாக்குதலை நடத்தக்கூடாது என்று இந்திய அரசு மூலமாக நிர்ப்பந்தம் ஏற்படுத்த வேண்டும்.

இலங்கைத் தமிழர்களை தமிழீழ விடுதலைப்புலிகள் மனித அரணாகப் பயன்படுத்துகிறார்கள். இலங்கை அரசு சொல்கிறது.

இலங்கையின் கிழக்கு மாகாணத்திற்கு இடம்பெயர விடாமல் புலிகள் தடுக்கின்றனர் என்ற குற்றச் சாட்டும் உள்ளது. வெளியேறும் தமிழர்கள் இராணுவத்துக்கும் அஞ்சியே புலிகளுடன் ஓடிக்கொண்டிருக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

இந்த வாதங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் விதத்தில் போர்க்களத்தில் சிக்கியுள்ள இலங்கைத் தமிழர்களை பாதுகாப்பாக வெளியேறச் செய்வது விடுதலைப் புலிகள் மற்றும் இலங்கை அரசு இருவரின் கடமை.

இது நடைபெற வேண்டுமானால் குறிப்பிட்ட சில நாட்களுக்கு போர் நிறுத்தம் அவசியம் அதற்கான நிர்ப்பந்தத்தை இந்திய அரசு மூலமாக ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு தமிழக அரசுக்கும் தமிழக அரசியல் கட்சிகளுக்கும் உள்ளாது.

தனித் தமிழீழப் போர் வேறு வடிவம் கொள்ளும் என்றும் 'கிளிநொச்சியை இழந்தது பின்னடைவு அல்ல' என்றும் பேசிக்கொண்டிருக்க இது தருணமல்ல.

இந்த ஒரு இலட்சம் தமிழர்களை இப்போது காப்பாற்றாவிட்டால் பிறகு எப்போதும் காப்பாற்ற முடியாது. அப்படியான நிலை ஏற்படும் போது தமிழகத்தில் நடந்த உண்ணா விரதம், கடையடைப்பு, ஆர்ப்பாட்டங்கள், அறிக்கைகள்,அனைத்துக் கட்சிக் கூட்டங்கள், அதன் தீர்மானங்கள், பிரதமருடன் சந்திப்பு என அனைத்துமே விழலுக்கு இறைத்த நீராகி விடும். (6)


யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் -வ.து




அனைவருக்கும் எம் இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்



புதுவருட தைப்பொங்கல் தினத்தை குடா நாட்டு மக்கள்
இனிமையாகக் கொண்டாட வேண்டுமென்பதற்காக
விசேட விலைக் கழிவுடன் விற்பனைக்கு விடப்பட்டுள்ள
பொங்கல் பொதிகளை வாங்கிப் பயன்பெறுங்கள்



1 கிலோ No1 தீட்டல் அரிசி, சர்க்கரை 500g, பயறு 100g, கற்கண்டு 100g, கஜு 25g, பிளம்ஸ் 50g, நெய், தேன் என்பன
தேவையான அளவு, எசென்ஸ் ஒரு போத்தல் ஆகியனவும்,
மேலதிகமாக,
விபூதி, சந்தனம், குங்குமம், ஊதுபத்தி, சூடம் என்பன ஒவ்வொரு பொதியுடனும் இணைப்பு ச் செய்யப்பட்டுள்ளது

வெளிச் சந்தை விலைப்படி ரூபா 510 என மதிப்பீடு செய்யப்பட்ட பொதியொன்று ரூபா 450 இற்கு மட்டும் எம்மால் விற்பனைக்கு தரப்படுகின்றது.

எமது சங்கத்தின் கூட்டுறவு நகர் கிளைகளிலும் சகல நுகர்ச்சிக் கிளை நிலையங்களிலும்
புதன்கிழமை (2009.01.07 தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம்.

அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு தைத்திருநாள் வாழ்த்துக்கள்

தலைவர், பணிப்பாளர், பொது முகாமையாளர், பணியாளர்கள்.

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு செல்ல வேண்டிய நிலை அரசுக்கு வரும்

## சபையில் ஸ்ரீகாந்த எம்.பி.



(கொழும்பு)

விடுதலைப்புலிகள் மீதான யுத்தம் என்ற பெயரில் வடக்கில் அப்பாவிப் பொதுமக்களைக் கொன்று குவித்துக் கொண்டிருக்கும் அரசாங்கம் சர்வதேச மனித உரிமைகள் சாசனத்தையே அவமதித்து விட்டது. இதற்காக இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது அரசாங்கமும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றக் கூண்டில் ஏறி நிற்க வேண்டிய நிலை வரும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பி.என்.ஸ்ரீகாந்தா சபையில் தெரிவித்தார்.

கொடி என்பது எமக்கு பிரச்சினையில்லை, ஐக்கிய இலங்கைக்குள் இணைந்து வாழ தமிழ் பேசும் மக்கள் தயாராகவே இருக்கின்றனர். அதற்கான தீர்வுத்திட்டம் அரசாங்கத்திடம் இருக்கின்றதா? யுத்த வெறி தலை விரித்தாடுகின்ற சிங்களக் கட்சிகளிடம் தமிழரின் சுயாட்சிக்கான தீர்வுத்திட்டம் எதுவுமேயில்லை, தமிழ் மக்கள் சிங்களவர்களின் அடிமைகளாக இருக்க மாட்டார்கள் என்றும் அவர் கூறினார்.

அவசரகால சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே ஸ்ரீகாந்தா எம்.பி.மேற்கண்டவாறு தெரிவித்தார். இங்கு அவர் மேலும் பேசுகையில், தொடர்ந்து கொண்டிருக்கின்ற யுத்தத்தை மேலும் முன்னெடுத்த புலிகளிடம் எஞ்சியிருக்கின்ற ஏனைய பிரதேசங்களையும் கைப்பற்றிவிட வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கம் என்பது தெட்டத்தெளிவானது.

இதனூடாக புலிகளைத் தோற்கடிக்க வேண்டும் என்பதே அரசாங்கத்தின் திட்டமாகவும் இருக்கின்றது. நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த யுத்தத்திற்கு முடிவு இராது. இது இவ்வருடத்தில் மட்டுமல்ல இனிவரும் காலங்களிலும் தொடர்ந்து கொண்டிருப்பதுடன் மக்களை இரத்த வெள்ளத்தில் தள்ளுகின்ற யுத்தமாகவே அமையும் என்பதை ஜனாதிபதிக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நிலங்களை பறிகொடுத்தாலும் கூட புலிகள் அடிபணிந்து விடுவார்கள் என்று நினைக்கக் கூடாது. புலிகளை வடக்கின் காடுகளுக்குள் விரட்டிவிட இந்திய அமைதிப்படை முயற்சித்தது அப்படியிருந்தும் உலகின் நான்காவது நிலையிலிருக்கின்ற இந்திய இராணுவப் பிரிவின் அமைதிப்படையை எதிர்த்து போராடி விரட்டிய சந்தர்ப்பங்களையும் மறந்து விடக் கூடாது. இப்போது படைகள் புலிகளை ஒரு பிரதேசத்திற்குள் வரையறுத்திருந்தாலும் அது தொடரும் கதையல்ல.

புலிகளை தோற்கடித்தே தீரவேண்டும் என்ற பிடிவாதத்தில்தான் அரசு யுத்தம் செய்து கொண்டிருக்கின்றது. அதன்மூலம் தீர்வு கிடைக்கும் என்று நினைத்தால் அரசாங்கம் யுத்தத்தை தாராளமாக நடத்தட்டும். அது பற்றி எமக்குப் பிரச்சினையில்லை. புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னரே தீர்வு என்று அரசு கூறிக் கொண்டிருக்கின்றது. அப்படியானால் அந்தத் தீர்வு எவ்வாறானதாக இருக்கும் என்பது எமக்கு நன்றாகவே தெரியும்.

வடக்கு கிழக்கு என்பது எமது தாயகபூமி. முல்லைத்தீவு மீட்கப்பட்டதன் பின்னர் வடக்கிற்கு ஜனநாயகம் என்று கூறினால் அது இன்றைய கிழக்கினை போன்றதாகவே அமையும். ஏனெனில், கிழக்கின் நிலைமை இன்று அவ்வாறு இருக்கின்றது.

ஐக்கிய தேசியக்கட்சி, ஜே.வி.பி.உட்பட அனைத்து சிங்களக் கட்சிகளும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு ஒருபோதும் தீர்வினை பெற்றுத்தரப்போவதில்லை. பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு முன்னர் தமிழ் மக்கள் தமிழராலேயே ஆளப்பட்டனர். ஆனால், அந்த நிலையை பிரித்தானிய ஏகாதிபத்தியம் சிதைத்து விட்டது.

பொதுமக்கள் பாதிக்கப்படாத வகையில் யுத்தம் நடத்துவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்துப்பத்திரிகைக்கு பேட்டி வழங்கி யுள்ளார்.அது உண்மையாக விருந்தால் கடந்த 31ஆம் திகதி முரசுமோட்டையில் விமானக்குண்டுவீச்சு மூலம் கொல்லப்பட் டவர்கள் பொதுமக்கள் இல்லையா ? அதன் பின்னர் ஜனவரி முதலாம் திகதியும் நான்காம் திகதியும் விமானத்தாக்குதல்களால் கொல்லப்பட்ட தமிழர்கள் மனிதர்கள் இல் லையா? வட்டக்கச்சியில் கொல்லப்பட்டவர்கள், காயமடைந்தவர்கள் புலிகள் அல்ல. அவர்கள் சாதாரண பொதுமக்கள்.

யுத்த முனையில் அப்பாவி பொதுமக்கள் கொல்லப்படுவதன் மூலம் ஜெனிவா ஒப்பந்தம் இலங்கை அரசாங்கத்தால் மீறப்பட்டிருக்கின்றது. பொதுமக்களின் உயிர்களோடு விளையாடுவதற்கு எவருக்கும் அதிகாரம் இல்லை. ஆனால் புலிகள் மீது யுத்தம் என்ற பெயரில் பொதுமக்கள் கொல்லப்படுகின் றனர். இதற்கு அரசாங்கம் பதில் கூறியே ஆக வேண்டும். என்றோ ஒரு நாள் இன் றைய மஹிந்த அரசாங்கம் சர்வதேச குற்ற வியல் நீதிமன்றத்திற்குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டே தீரும். புலிகளின் தலைவர் பிரபாகரன் குற்றம் இழைத்திருந்தால் அவரையும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு தாராளமாகக் கொண்டு போகலாம். ஆனாலும் அங்கு அரசாங்கம் கூண்டில் ஏறி நிற்க வேண்டிய நிலைவரும்.

வன்னி மக்கள் குறித்து அரசாங்கம் இன்று முதலைக்கண்ணீர் வடிக்கின்றது. புலிகளுக்கும் படையினருக்கும் இடையிலான யுத்தத்தில் இலட்சக்கணக்கான மக்கள் சிக்குண்டுள்ளதை இந்த அரசாங்கம் உணரவில்லையா? வன்னி மக்களை மீட்கப்போவதாகக் கூறுகின்ற அரசாங்கம் அவர்களை சொர்க்கத்திற்கா அனுப்பப்போகின்றது . (6)

## இராணுவ முன்னேற்றத்தைத் தடுக்க புலிகளால் பாதுகாப்பு வேலி அமைப்பு

(கொழும்பு)

இராணுவத்தினர் கிளிநொச்சியின் கிழக்கே தொடர்ந்தும் முன்னேறுவதைத் தடுக்கும் நோக்கில் விடுதலைப் புலிகள் புதிய பாதுகாப்பு எல்லைகளை அமைத்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பரந்தனைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த இராணுவத்தினர் அதன் தொடர்ச்சியாகக் கிளிநொச்சியையும் தற்பொழுது ஆணையிறவின் தென்பகுதியையும் கைப்பற்றியுள்ளனர்.

தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தொடர்ந்தும் இராணுவத்தினர் உள்நுழைவதைத் தடுக்கும் நோக்கில் கிளிநொச்சியின் தெற்குப் பகுதியில் இரணைமடுக் குளத்திலிருந்து வட பகுதியாகத் திருவையாறு ஊடாக ஊரியான் வரை விடுதலைப் புலிகள் பாதுகாப்பு எல்லைகளை அமைத்து வருவதாக இணையத் தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஏ-9 வீதிக்குச் சமாந்தரமாக இந்தப் பாதுகாப்பு எல்லை அமைக்கப்பட்டிருப்பதாக அதில் குறிப்பிட்டுள்ளது. முரசுமோட்டை, கண்டாவளை ஆகியவற்றின் ஊடாக ஊரியான் வரை இந்தப் பாதுகாப்பு எல்லை அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

## சோதனை நடவடிக்கைகளில் 27 தமிழ் இளைஞர்கள் கைது

(கொழும்பு)

கொழும்பிலும் புறநகர்ப் பகுதியிலும் மலையகத்திலும் கடந்த இரண்டு நாட்களாக இடம்பெற்ற சோதனை நடவடிக்கையில் 27 தமிழ் இளைஞர்கள் கைதானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் 15 தமிழ் இளைஞர்களும் மலையகத்தில் 12 தமிழ் இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விசேட அதிரடிப்படையினரும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் சிலர் குற்றப் புலனாய்வு தலைமையகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (6)


# யூனியன் அஷ்யூரன்ஸின் உடனடி மாபெரும் வேலை வாய்ப்பு

UNION ASSURANCE PLC

யூனியன் அஷ்யூரன்ஸ் இலங்கை காப்புறுதி துறையில் 22 வருடங்களைக் கடந்த கம்பனியாகும். இந் நிறுவனம் கடந்த 07 வருடங்களாக யாழ். மாவட்டத்தில் மிகவும் சிறந்த சேவையினை வழங்குவதுடன் பலருடைய வாழ்க்கைக்கு ஒளிமயமான எதிர்காலத்தினை வழங்கியுள்ளது. இவ் யாழ். கிளைக்கும், யாழ். மாவட்டத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள இரண்டு புதிய உப கிளைகளுக்கும் நேர்முகத் தேர்வின் மூலம் துடிப்பு மிக்க இளைஞர், யுவதிகளை தெரிவு செய்யவுள்ளது.

- A/L பரீட்சைப் பெறுபேறுகள் உங்கள் கனவுகளை நனவாக்கவில்லை என்ற கவலை வேண்டாம். உங்கள் எதிர்காலத்தை வளமாக்க எம்முடன் இணையுங்கள்.
- வாழ்க்கையில் ஏதாவது சாதிக்க வேண்டும் என்று விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய சந்தர்ப்பம் ஆகும்.

**பதவிகள் :-**

- காப்புறுதி ஆலோசகர்கள்
- காப்புறுதி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.
- Assistent Agency Development Manager

**தமைமைகள் :-**

- G.C.E. O/L இல் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி (ஆகக் குறைந்தது)
- காப்புறுதித் துறையில் முன்னனுபவம் விரும்பத்தக்கது. (கட்டாயமல்ல)

**உங்களுக்கு கிடைக்கும் நன்மைகள்:-**

- வரையறுக்கப்படாத அதியுயர் சம்பளம்
- இலவசமான வெளிநாட்டுச் சுற்றுலாவிற்கான அரிய வாய்ப்பு
- 6 மாத காலத்தில் அதியுயர் திறமையுடன் வேலை செய்பவர்கள் நிரந்தர வருமானத் திட்டத்திற்குள் உள்வாங்கப்படுவார்கள்.
- வருடாந்தம், மாதாந்தம் தங்கம் போன்ற விருதுகளைப் பெறுவதற்கான வாய்ப்பு
- இலகு தவணைமுறையில் வாகனக் கடன் வசதி.
- இலவச தொலை பேசி வசதி.
- மேலதிகப் படிகள்

தொலைவில் உள்ளதை விடுத்து கையிலுள்ளதை வளமாக்குவோம்.

**நேர்முகத் தேர்வு நடைபெறும்.**
**இடம் :- பிரதான மண்டபம்**
*யூனியன் அஷ்யூரன்ஸ்,*
*139 ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

காலம் :- 09-01-2009 வெள்ளிக்கிழமை.
நேரம் :- 9.30 am

அ. அன்ரன்
அபிவிருத்தி முகாமையாளர்
யூனியன் அஸ்யூரன்ஸ் P.L.C

(2077)


# பாராளுமன்ற செய்திகளை திரித்து வெளியிட வேண்டாம்

## சபாநாயகர் ஊடகங்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

பாராளுமன்ற உரைகள் உட்படத் தகவல்களை இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் திரித்து செய்தி வெளியிடுவதாகவும் அவ்வாறு செயற்படுவதைத் திட்டவட்டமாக தவிர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் சபாநாயகர் டபிள்யு ஜே.எம்.லொக்குப்பண்டார பாராளு மன்றத்தில் நேற்று எச்சரிக்கை விடுத்தார்.

அரசாங்கத்துக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை வெள்ளிக்கிழமை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் நேற்று முன்தினம் தீர்மானிக்கப்பட்டதாக சில பத்திரிகைகளில் செய்தி வெளிவந்துள்ளது.

எனினும், அவ்வாறு தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை. கட்சித் தலைவர்களின் கூட்டத்தின் தகவல்கள் எவ்வாறு பத்திரிகைகளுக்கு கிட்டியது எனக் கேள்வி எழுப்பிய சபாநாயகர் பாராளுமன்றச் செய்திகளைத் திரித்து வெளியிட வேண்டாமென எச்சரிக்கை விடுத்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குள்ள சிறப்புரிமையின் பிரகாரம் நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்ட போது அரசாங்கம் அதற்கு அவகாசம் அளித் துள்ளமை மகிழச்சிக்குரியது என சபாநாயகர் மேலும் தெரிவித்துள்ளார். (6)

# மரண அறிவித்தல்

## செல்வி நாகம்மா கதிர்காமர்

**(சங்கீத பூஷணம்–இளைப்பாறிய ஆசிரியை யா/ மகாஜனா கல்லூரி)**

கீரிமலையைப் பிறப்பிடமாகவும் கந்தரோடையில் வசித்து வந்தவருமான செல்வி கதிர்காமர் நாகம்மா 07.01.2009 அன்று அதி காலை 1 மணியளவில் இறைவனடி அடைந்து விட்டார். இவரின் திருவுடல் அவரின் விருப்பப்படி மருத்துவப்பீடத்திற்கு வழங்கப்பட் டுள்ளது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரிற்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்
ந.திருவடி

(2084)

# 2009 ஆம் ஆண்டு உங்களுக்கு எப்படி?

## மீனம்

2009 ஆண்டில் இந்த ராசிக்காரர்க ளுக்கு பொருளாதார வளர்ச்சி சிறப்பாக அமை யும். கொடுத்த கடன்கள் திரும்பி வரும். உங்களின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போட்டவர்கள் விலகுவார்கள். சமுதாயத்தில் உயர்ந்தவர்களால் உங்களின் செல்வாக்கு உயரும். உங்களிடம் வீண் வம்புக்கு வந்த வர்கள் தோற்றுவிடுவார்கள். மேலும் உங் களைப் பகைத்துச் சென்றவர்கள் திரும்பி வருவார்கள். அரசாங்கத்திலிருந்து நீங்கள் எதிர்பார்க்கும் சாதகமான உத்தரவுகள் கிடைக் கும். உங்களின் முகத்தில் வசீகரம் கூடி, பேச் சுத்திறன் அதிகரிக்கும்.

மே மாதம் முதல் ஜுலை மாதம் வரை உங் களின் ஆறாம் ராசியில் பலம் பெற்று அமர்ந் துள்ள சனிபகவானை குரு பகவான் பார்வை யிடுகிறார். இதனால் களவு போன பொருட் கள் திரும்பக் கிடைக்கும். பணப்பிழக்கம் நன்றாக இருக்கும். வழக்குகளில் சாதகமான தீர்ப்புக்களைக் காண்பீர்கள். பூமி வாகனங் களால் நலன்கள் வந்து சேரும். நீதி நேர் மைக்குக் கட்டுப்பட்டுச் செயற்படுவீர்கள். மேலும் பழி பாவங்களுக்கு அஞ்சி நடப்பீர் கள் கடின மான வேலைகளையும் சுலபமாக முடித்து சிறப்பான ஆதாயங்களைப் பெறுவீர்கள்.

ஆகஸ்ட் மாதத்தில் நெடுநாளாக வாட்டிய நோயிலிருந்து விடுதலை அடைவீர்கள் விரும்பிய இடமாற்றத்தையும் பெறுவீர்கள்.

உங்களின் பங்காளிகளுடன் நல்ல உறவை மேற்கொள்வீர்கள் மேலும் அவர் களுடன் இருந்த பிணக்குகளும் நீங்கும். உடன் பிறந்தோரால் சில நன்மைகளும் உண்டாகும். செப்ரெம்பர் மாதத்திலிருந்து ஆண்டு இறுதி வரையில் திக்பலம் பெற்ற சனிபக வானை லாபஸ்தானத்திலுள்ள குரு பகவான் பார்வை செய்வதால் நோய் நொடி கள் அண்டாது புதிய பொறுப்புகளும் கிடைக் கப் பெற்று புது முயற்சிகளைத் தைரியமாகச் செயல்படுத்துவீர்கள் உங்கள் கீழ் பணிபுரி வோரை கண்ணும் கருத்துமாகக் காப்பீர்கள். மனதில் இருந்த பாரம் குறையும். பொருளா தார வளம் கூடத் தொடங்குவதால் கோயில் திருப்பணிகள் செய்வதோடு ஏழை எளியவர் களின் கல்வி மற்றும் மருத்துவச் செலவுக ளுக்கும் உதவி செய்து மகிழ்வீர்கள்.

உத்யோகஸ்தர்களுக்கு வேலையில் சுமை குறையும் அப்படியே சில புதிய வேலைகள் தோன்றினாலும் சக ஊழியர்கள் தாங்களா கவே வந்து உங்களின் பணியைப் பகிர்ந்து கொள்வார்கள். மேலதிகாரிகள் உங்களின் கோரிக்கைகளை உணர்வுபூர்வமாக பரிசீ லித்து உங்களுக்குச் சாதகமான முடிவுகளை எடுப்பார்கள். மேலும் விரும்பிய வண்ணம் இடமாற்றங்களும் கிடைக்கும்.

வியாபாரிகளுக்கு கொடுக்கல், வாங்கல் விடயங்கள் சிறப்பாக முடிவடையும். கூட்டா ளிகள் உங்களோடு நட்புடன் பழகுவார்கள் வியாபாரத்தைப் பெருக்க புதிய சந்தைகளை நாடிச் செல்வீர்கள். உங்களின் வியாபார யுக்திகள் சரியான இலக்கைச் சென்றடையும் இந்த ஆண்டு சிறிய முதலீடுகளில் பெரிய தன வரவைக் காண்பீர்கள்.

விவசாயிகள் கடுமையாக உழைப்பீர்கள் அதனால் அமோகமான விளைச்சல் கிடைக் கும் தகுந்த நேரத்தில் தரமான விதைகளை விதைத்து வளத்தைப் பெருக்குவீர்கள் விளை பொருள் விற்பனையில் லாபங்களைக் காண் பீர்கள். அதேநேரம் கால்நடைகளினால் எதிர்பார்த்த பலன்களைப் பெற முடியாமல் போகலாம்.

அரசியல்வாதிகள் வழக்கு விவகாரங்க ளில் சாதகமான தீர்ப்புகளைப் பெறுவீர்கள். புதிய பொறுப்புகள் கிடைக்கும் உற்சாகமாக மக்கள் சேவையில் ஈடுபடுவீர்கள் மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். அதேநேரம் அடுத் தடுத்து பயணங்கள் செய்ய நேரிடும். புதிய முயற்சிகளில் சாதகமான முடிவுகளைக் காண் பீர்கள் அரசு அதிகாரிகள் உங்கள் கோரிக்கை களை உடனடியாக நிறைவேற்றித்தருவர்.

கலைத்துறையினர் தங்கள் துறையில் நுணுக்கங்களை அறிந்து அவற்றை தகுந்த சமயத்தில் உபயோகித்து வெற்றி பெற ஏது வான சூழல் உருவாகும். பாராட்டும் புகழும் கிடைக்கும். இதனால் எல்லாக் காலங்களி லும் உழைப்பைக் கூட்டிக்கொண்டு செயல் படவும் மற்றபடி புதிய வாய்ப்புகள் தடங்க லின்றிக் கிடைக்கும். ரசிகர்களின் ஆதரவுடன் சில பயணங்களை மேற்கொண்டு பலனடை வீர்கள்.

பெண்மணிகள் குடும்பத்தில் சந்தோஷத் தைக் காண்பீர்கள். கணவரிடம் அன்பும் பாசமும் அதிகரிக்கும். உறவினர்கள் அனுசர ணையாக நடந்து கொள்வார்கள். அதே சம யம் உங்கள் குடும்பப் பொறுப்புக்களைச் சரி

**ஜோதிடர் கே.சீ.எஸ். ஐயர்**

வர ஆற்றி வரவும் குழந்தைகளுடன் சுற் றுலா சென்று இனிமையாக உங்கள் காலத் தைக் கழிப்பீர்கள்.

மாணவமணிகளுக்கு கல்வியில் நாட்டம் அதிகரிக்கும். வருங்காலத் திட்டங்களுக்கு அஸ்திவாரம் போடுவதற்கான சூழல் உரு வாகும். உங்களை பெற்றோரும், ஆசிரியர்க ளும் பாராட்டுவார்கள். விளையாட்டுகளில் விரும்பிய வெற்றிகளைக் காண்பீர்கள். நண் பர்களிடம் ரகசியங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம். உங்களின் தன்னம்பிக்கை உயர ரக் காண்பீர்கள்.

பரிகாரம்

பிரதி சனிக்கிழமைகளில் சனிபகவானை யும் பிரதி செவ்வாய்க்கிழமைகளில் துக்கை யையும் வழிபட்டு வர பலன்கள் நன்றாக அமையும். (முற்றும்)

# அரசியல் தீர்வின் அவசியத்தை விரைவு படுத்தியுள்ளது

### கிளிநொச்சியை கைப்பற்றியமை குறித்து பிரிட்டன் அறிக்கை

(கொழும்பு)

கிளிநொச்சியைப் படையினர் கைப்பற்றி யதைத் தொடர்ந்து இலங்கை அரசாங்கம் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டிய அவசியம் விரைவுபடுத்தப் பட்டுள்ளது என பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சின் மலோச்பிரவுண் பிரபுவும் பொது நலவாய அலுவலகத்தைச் சேர்ந்த டக்ளஸ் அலெக்சாந்தரும் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

இலங்கையில் அரச படையினரால் புலிகளின் முன்னாள் நிர்வாகத் தலைநகராக விளங்கிய கிளிநொச்சி கைப்பற்றப்பட்டது தொடக்கம் அனைத்து விடயங்களையும் நாம் உன்னிப்பாக அவதானித்து வருகிறோம்.

இந்நிலையில் அனைத்து மக்களின் அர சியல் அபிலாஷைகளையும் பூர்த்தி செய்ய வேண்டிய அரசியல் தீர்வின் அவசியத்தை தற்போதைய நிலை மேலும் விரைவு படுத்தி யுள்ளது. அது மாத்திரமின்றி அரசியல் தீர்வின் மூலமே உறுதியானதும் நீடித்து நிலைக்கக்கூடியதுமான அமைதியை இலங் கையில் நிலைநாட்டக் கூடியதாக இருக்கும். (6)

# எம்.ரி.வி.ஊடக நிறுவனம் தாக்கப்பட்டமை கண்டிக்கப்பட வேண்டிய செயலாகும்

### அமைச்சர் பெ. சந்திரசேகரன் தெரிவிப்பு

(கொழும்பு)

எம்.ரி.வி.ஊடக நிறுவனம் தாக்கப்பட் டமை ஊடக சுதந்திரத்தை நேசிக்கும் அனை வராலும் கண்டிக்கப்பட வேண்டிய செயலா கும் என்று அமைச்சர் பெ.சந்திரசேகரன் தெரி வித்துள்ளார். அவர் இது தொடர்பாக வெளி யிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே இவ் வாறு தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் கூறியுள்ளதாவது.

ஜனநாயக நாட்டில் கருத்துச் சுதந்திரத்துக்கு முடிவுமையான இடம்வழங்க வேண்டும் என்ப தில் அவ்வப்போது ஆட்சியில் இருக்கும் அர சாங்கங்கள் அக்கறை காட்ட வேண்டும் என் பது பொதுவான எதிர்பார்ப்பாகும்.

அரசியல் கருத்துக்களை அல்லது விமர் சனங்களை மாற்றுக் கருத்துக்களினால் தெளிவு படுத்தப்படவேண்டுமே தவிர இதற்கு பலாத் காரத்தை பிரயோகிப்பது ஊடக சுதந் திரத்தை ஸ்தம்பிக்கவே செய்யும்.

ஊடக சுதந்திரம் ஸ்தம்பிப்பது நாட்டு நலனுக்கு உகந்ததாக இருக்காது.

எனவே, இதற்கான உண்மையான குற்ற வாளிகளை இனம் காணுவதில் அரசாங்கம் முனைப்புடன் செயற்படவேண்டும்.

இவ்வாறான நிலை தொடர்ந்தால் வெளிப் படையாகவும் சுதந்திரமாகவும் கருத்துக் களை வெளியிடுவதற்கு ஊடகங்கள் தயக் கம் காட்டுவதோடு அச்சம் அடையும் நிலை ஏற்பட்டு விடும்.

இது மிக மோசமான பின் விளைவு களையே ஏற்படுத்தும் என்பதால் மலையக மக்கள் முன்னணி இத்தகைய செயற்பாடு களை வன்மையாகக் கண்டிப்பதோடு இவ்வா றான செயற்பாடுகள் தொடராமல் இருப் பதற்கு அரசாங்கம் உடனடியான நடவடிக் கைகளை மேற்கொள்ளவேண்டுமெனவும் வலியுறுத்து கின்றது. (6)

# கொழும்பில் 2 தமிழர்கள் காணாமல் போயுள்ளனர்

### பிரதியமைச்சர் இராதாகிருஷ்ணனிடம் முறைப்பாடு

(கொழும்பு)

ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளர் ஒரு வரும், கணனி நிலைய நெறகபே நடத்தி வந்த ஒருவருமாக இருவர் கொழும்பில் காணாமல் போயுள்ளனர். இது குறித்து பிரதி அமைச்சர் பெ. இராதாகிருஷ்ணனிடம் முறையிடப்பட் டுள்ளது.

முல்லைத்தீவு மக்கள் வங்கி கிளை முன் னாள் முகாமையாளரான மரியதாசன் செல் வேந்திரன் (வயது 57) என்பவரே முகத் துவா ரத்திலிருந்து கொட்டாஞ்சேனைக்கு செல்லும் வழியில் காணாமல் போயுள்ளதாக மகனான பேபியன் டெமேரியா புகார் செய்துள்ளார். அதே போல் தெஹிவளையில் நெட்கபே நடத்தி வந்த 29 வயதுடைய வவுனியாவை சேர்ந்த சதானந்தன் பசிகரன் வெள்ளவத் தையில் வைத்து காணாமல் போயுள்ளதாக தாயாரான எஸ்.வசந்திராதேவி புகார் செய்துள் ளார்.

2009ஆம் ஆண்டு பிறந்து சில தினங் களுக்குள் இவர்கள் இருவரும் காணாமல் போயிருப்பது குறித்து உயர் மட்ட பொலிஸா ருக்குப் பிரதி அமைச்சர் அறிவித்துள்ளதுடன் இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டார் களா அல்லது கடத்தப்பட்டார்களா என்பதை கண்டுபிடித்து அறிவிக்குமாறும் கோரியுள் ளார்.

2008ஆம் ஆண்டில் மொத்தம் 284 பேர் காணாமல் போயுள்ளதாக பிரதி அமைச் சரிடமும் காணாமல் போதல் மற்றும் கடத்தல் தொடர்பான விசாரணைகளை மேற்பார்வை செய்யும் குழுவிடமும் புகார் செய்யப்பட்டுள் ளது.

இவர்களில் 79 பேர் விடுவிக்கப்பட்டுள்ளது டன் 4 பேர் கொல்லப்பட்டனர்.

பூசா முகாம் பயங்கரவாதத் தடுப்புப்பிரிவு களில் 22 பேர் கண்டுபிடிக்கப்பட்டனர். மிகு தியான 179 பேர் தொடர்பாக எதுவித தகவ லையும் கண்டுபிடிக்க முடியாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பூசா முகாமிலிருந்து இம் மாத இறுதிக்குள் சுமார் 70 பேர் விடுவிக்கப் படவிருப்பதாகவும் மற்றவர்களது விசாரணை கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதாகவும் பயங்கரவாதத்தடுப்புப் பிரிவு இயக்குநர் சி. என்.வாக்கிஸ்டர் தெரிவித்தார். (6)

# அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் குழு தொடர்ந்து இயங்க வேண்டும்

### ஜனநாயக மக்கள் முன்னணி வலியுறுத்து

(கொழும்பு)

கிளிநொச்சி வீழ்ந்த போதும் இலங்கை இனப்பிரச்சினைக்கான அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் குழு தொடர்ந்து இயங்க வேண் டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணி வலியுறுத்தியுள்ளது.

ஜ.ம.மு.வின் பொதுச் செயலாளர் நல் லையா குமரகுருபரன் கூறியுள்ளதாவது,

கிளிநொச்சி பிடித்துவிட்டதன் மூலமே நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. அனைத்துக்கட்சி பிரதிநிதி கள் குழு தொடர்ந்தும் இயங்க வேண்டும்.

அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் குழுவி னால் தீர்வுத் திட்டத்தை வெளியிட முடியாமல் போவது என்பது வேறு.

கிளிநொச்சியைக் கைப்பற்றி விட்டதால் கைவிடுவது என்பது வேறு. கிளிநொச் சியைக் கைப்பற்றிவிட்டதால் அரசியல் வழித் தீர்வில் எதுவித தாக்கமும் ஏற்படப் போவ தில்லை.

சிங்கள புத்தி ஜீவிகளையும் சிங்கள வஹுசாரிகளையும் அடிப்படைவாதிகள் தவ றாகத் திசை திருப்பிச் செல்ல வேண்டாம் என் றார்.

முன்னதாக தேசப்பற்றுக்கான தேசிய இயக்கத்தினர் கிளிநொச்சியே வீழ்ந்து விட்ட தால் இனப்பிரச்சினைக்கான அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவைக் கலைத்துவிட வேண்டும் என்று அண்மையில் வலியுறுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

ஒரு போலி நண்பன் தோழமையை விட ஒருவன் தனியாக வாழ்வது எவ்வளவோ மேலானது.
~ புத்தர்

வலம்புரி

## சண்டை பிடிப்பவரின் சம்மதத்துடனா விலக்குப் பிடிப்பது?

யுத்த நிறுத்தம் செய்வதற்காக அமைச்சர் பிரணாப் முகர்ஜியை இலங்கைக்கு அனுப்புவதென இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்ததாக செய்திகள் வெளிவந்திருந்தன. இந்தச் செய்தியை வெளிப்படுத்தியவர் தமிழகத்தின் முதல்வர் கலைஞர் கருணாநிதி.

இலங்கை விவகாரம் தொடர்பாக தமிழகத்தின் அனைத்துக் கட்சிக் குழுவுக்கு தலைமை தாங்கி, பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்த போது அமைச்சர் பிரணாப் முகர்ஜியை இலங்கைக்கு அனுப்பி யுத்த நிறுத்தம் செய்வதாக மன்மோகன் சிங் உறுதியளித்தாகக் கலைஞர் கரு ணாநிதி தகவல் வெளியிட்டிருந்தார்.

எனினும் மன்மோகன் சிங் அப்படி எதுவுமே கூறவில்லை. தமிழகத் தலைவர்களை பிரதமர் ஏமாற்றிவிட்டார் என வை.கோபாலசாமி கூறியிருந்தார்.

இந்த இரண்டு தலைவர்களின் முரண்பட்ட தகவலையும் பொறுத்திருந்து பார்க்கலாம் என்ற நிலையில் பிரணாப் முகர்ஜியின் இலங்கை வருகை வெறும் ஏமாற்று வித்தை என்பதை அறிய முடிந்தது.

வைகோ கூறியது போல தமிழகத் தலைவர்களை காங்கிரஸ் கட்சி ஏமாற்றிவிட்டது என்பதே நிஜம்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் யுத்தம் வேகமெடுத்து மக்கள் பல தடவைகள் இடம்பெயர்ந்து, ஆற்றலைகின்றபோது அமைச்சர் பிரணாப் முகர்ஜி இலங்கைக்கு விஜயம் செய்யாததற்கான காரணம் அவரின் வருகையை இலங்கை அரசு விரும்பவில்லை என அமைச்சர் டி. ஆர்.பாலு கூறியிருப்பது தெனாலிராமனின் கோமாளித்தனம் போன்றது.

இலங்கையில் யுத்தம் நடக்கிறது. தமிழ் மக்கள் பலியாகிறார்கள். இலங்கைக்குத் தேவையான ஆயுத உதவிகளை இந்தியா வழங்கி வருகிறது.

இந்தியப் புலனாய்வுத்துறையின் உதவி, ராடர் கருவிகளை இயக்கும் இந்தியப் படை, கூடவே இந்திய கடற்படை இலங்கையில் என்ற தகவல், கடலோரக் காவல் என்றவாறு பலவகைகளிலும் இலங்கை அரசுக்கு உதவிவரும் இந்தியாவின் வெளிவிவகார அமைச்சரை தனது நாட்டுக்கு வர இலங்கை விரும்பவில்லை எனக் கூறுவது எத்துணை ஏமாற்றுத்தனமானது.

இதனை தமிழகத்தைச் சேர்ந்த ஒரு தமிழன் கூறினார் என்பது வேதனையை இரட்டிப்பாக்கக் கூடியது.

டி.ஆர்.பாலுவின் விளக்கத்தைப் பார்க்கும் போது இரண்டு பேருக்கிடையே சண்டை நடக்கிறது. எனினும் அவர்களை விலக்குப் பிடிப்பதற்கு சண்டையில் ஈடுபட்டுள்ள ஒருவர் விரும்பவில்லை. அதனால் விலக்குப் பிடிக்க முடியவில்லை என்பது போல் இருக்கிறது.

இந்துமா சமுத்திரத்தில் பிராந்திய வல்லரசாக விளங்கும் இந்தியா, முன்னதாக பாகிஸ்தானுடன் யுத்தம் நடத்தி பங்களாதேஷை உருவாக்கிய பஞ்சசீலக் கொள்கையுடைய பாரத தேசம் தனது அண்டை நாடான இலங்கையில் சிறுபான்மை இனம் அல்லற்படும்போது அவர்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்காது ஏதேதோ கூறுவது மிகப் பெரும் கயமைத்தனமாகும்.

# இறை விழுமியம்

## நூல் விமர்சனம்

இலங்கைத் திருச்சபையின் முரண்பாட்டுக் கற்கை நெறி மன்றத்தின் வெளியீடாக வந்திருக்கும் இந் நூல் நல்லூர் யாக்கோப்பு தேவாலய அருட்தந்தை அ.ஸ்ரீபன் அவர்களால் எழுதப்பெற்றது. இறையியலை மிக அழகாக மக்கள் மனதில் பதிய வைக்கும். இருபத்தொன்பது கட்டுரைகளை உள்ளடக்கி வெளிவந்திருக்கிறது.




நாம் வாழும் யாழ்ப்பாண மண்ணினதும் இலங்கைத் தேசத்தினதும் போரியல், வறுமை மனித உரிமை மீறல்கள், வன்முறைகள், பாலியல் துஷ்பிரயோகங்கள் மனிதத்துக்கு விடுக்கப்படும். அச்சுறுத்தல்கள், ஆக்கிரமிப்புகள் போன்ற சூழல்களில் கடவுளின்செயற்பாடு, இயேசுவின் பிறப்பு அவரது வாழ்வும் பணியும் எவ்வாறு மானிட வாழ்வியலோடு இணைந்து சரியான, பற்றுறிதியான உறுதிமிக்க நிலையைக் கட்டியெழுப்பவும் பிழையான தேவையற்றனவற்றைத் தகர்த்தெறிந்து வாழ்வியலை நல் வழிப்படுத்தவும் இந்நூல் வழிகாட்டியாக அமைந்திருக்கிறது.

கால மாற்றத்திற்கு ஏற்றவையாக இறைவனை நோக்கிய பிரமாணங்கள் மாற்றப்படவேண்டும் என்று கூறும் நூலாசிரியர் இன்றைய விஞ்ஞான தொழில் நுட்ப சமூக மாற்றங்களுக்கேற்ப எம்மால் புரிந்து கொள்ளக்கூடிய எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய பிளவுகளை அகற்றி ஐக்கியத்தை வலுப்படுத்தக்கூடிய புதியதோர் மாற்றம் வேண்டும் என வலியுறுத்துகின்றார். அத்தோடு நின்று விடாமல் மேலைத் தேய வலைக்குள் அவர்களின் மோகத்துள் நாம் நின்று விடாமல் எம்மண்ணின் அரசியல் பொருளாதார கலை கலாசார செயற்பாடுகளுக்குள் கிறிஸ்துவின் இறையியலை வளர்த்து புதுமையான மாற்றத்தைக் காணவேண்டும் என்றும் கூறுகிறார்.

இலங்கையில் வெளிவரும் இறையியல் சஞ்சிகைகளில் 2002ஆம் ஆண்டு முதல் 2006ஆம் ஆண்டு வரை தன்னால் எழுதப்பெற்ற கட்டுரைகளைத் தொகுத்தே இந்நூலை இந்நூலாசிரியர் தந்துள்ளார். நீல- கறுப்பு நிறப் பின்னணியில் திரு .அ.ஜீட்சன் வரைந்த அட்டைப்படம் எம்மை 'இந்த 'இறை விழுமியம்' நூலை ஒருமுறை பார்க்க வேண்டும் என்ற ஆவலைத் தூண்டி நிற்கிறது.

*அரியாலையூர் சி. சிவதாசன்*

# ஈழத் தமிழர்கள் மீதான தாக்குதலை நிறுத்த தமிழீழ ஆதரவுக் கட்சிகளுடன் தீவிர ஆலோசனை

## திருமாவளவன் தெரிவிப்பு



ஈழத் தமிழர்கள் மீதான தாக்குதலை நிறுத்த தமிழீழ ஆதரவுக் கட்சிகளுடன் 10ஆம் திகதி ஆலோசனை நடத்த விருப்பதாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தில் கிளர்ந்துள்ள மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் தமிழீழ விடுதலையை ஆதரிக்கும் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் விடுதலைச் சிறுத்தைகள் சந்தித்து கலந்தாய்வு செய்து வருகிறது. பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் டாக்டர். ராமதாஸ், திராவிட கழகத்தின் தலைவர் கி. வீரமணி , தமிழ்த் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ. நெடுமாறன் ஆகியோரை சந்தித்து பேசியிருப்பதுடன் மேலும் சில தலைவர்களை சந்தித்திட முயன்று வருகிறோம் .

அத்துடன் அது தொடர்பாக விடுதலைச் சிறுத்தைகளின் மாநில நிர்வாகக் குழுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை சென்னையில் கூடி ஈழத் தமிழர்கள் சிக்கலில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து விடுதலைச் சிறுத்தைகள் கலந்தாய்வு செய்கிறது.

தமிழீழ ஆதரவுக்கட்சிகளின் தலைவர்கள் தேர்தல் கூட்டணி வரம்புகளை மீறி ஈழத் தமிழர்களின் மீதான சிங்கள இன வெறி ஆட்டத்தை தடுத்து நிறுத்திட ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என்கிற வகையில் எதிர்வரும்10 ஆம் திகதி சென்னையில் கூடி முடிவெடுக்கவும் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன என்று கூறியுள்ளாார் (6)

## இலங்கை மீனவர்கள் விடுதலை

(கொழும்பு)

இந்தியக் கடற்பரப்பில் அத்துமீறி பிரவேசித்து மீன்பிடியில் ஈடுபட்ட 53 இலங்கை மீனவர்களை அந் நாட்டு அரசாங்கம் விடுதலைசெய்துள்ளது. மீன்பிடித்துறை அமைச்சர் பீலிக்ஸ் பெரேராவிற்கும் இந்திய உயர் அதிகாரிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையை தொடர்ந்து இந்த நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பத்துப்படகுகளுடன் 53 மீனவர்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இலங்கைக்கு திரும்பவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.கைது செய்யப்பட்டு விடுதலைசெய்யப்பட்ட மீனவர்கள் திருகோணமலை மற்றும் நீர் கொழும்பைச் சேர்ந்தவர்கள் எனக்குறிப்பிடப்படுகிறது. (6)

# சீரடி பாபாவே ஸ்ரீ சத்ய சாயி பகவான்

ஒருமுறை, சீரடி சாயி துவாரகாமாயில் அமர்ந்திருந்தார். கான்பூரில் இருந்து ஒரு பக்தை வந்தாள். அவருக்கு நமஸ்காரம் செய்தாள். பின்பு அங்கேயே உட்கார்ந்தாள். பாபா அவளிடம் , ' உனது மகனின் பிறந்த நாள் விழா நன்றாக நடை பெற்றதா?' எனக் கேட்டார். அதற்கு அவரும் , " பாபா, நாங்கள் அந்த நாளை மிக மகிழ்ச்சியாகக் கொண்டாடினோம். எல்லா உறவினர்களையும் அழைத்து நன்றாக விருந்தளித்தோம். அதற்கு முன் ஒரு வெள்ளித்தட்டில் எல்லா உணவுப் பொருட்களையும் சரியாகச் சமைத்து அதனை உங்களுக்கு நைவேத்தியமாகப் படைத்து பூஜை அறையிலேயே வைத்து விட்டு வந்தோம்.சில நேரம் கழிந்ததும் அப் பிரசாதத்தை விருந்தாளிகளுக்கு அளிப்பதற்காக அவ்வறைக்குள் சென்றால் அங்கு அந்த வெள்ளித் தட்டையே காணவில்லை. என்னையும் எனது கணவரையும் தவிர வேறு எவரும் அவ் அறைக்குள் நுழையவும் இல்லை. அப்படி இருக்கையில், அது எப்படிக் காணாமல் போகும்? அதற்காக நாங்கள் மிகவும் வருந்துகிறோம் பாபா! என்ன நடந்தது? எனக் கேட்டாள்.

அதற்குள் சீரடி பாபாவும், பூஜை அறையில் அந்தத் தட்டை என் படத்துக்கு முன்வைத்தாய் நினைவிருக்கிறதா? அத்துடன் என்னை உன் குழந்தையின் மகிழ்ச்சிகரமான பிறந்த தினத்திற்கு வந்து நைவேத்தியத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் பிரார்த்தித்தாயே... அப்படியே நீ விரும்பிய படி நான் வந்து நைவேத்தியம் அனைத்தையும் உட் கொண்டேன் நீ அதை நம்புவாயோ மாட்டாயோ என்ற சந்தேகத்தில் அவ் வெள்ளித் தட்டையும் என்னோடு எடுத்து வந்து விட்டேன்.' இதோ அந்த வெள்ளித்தட்டு எனச் சொல்லி தன் தலையணையின் அடியில் இருந்து அதனை இழுத்து அவளிடம் கொடுத்தார். அவளுக்கு மிக்க ஆனந்தமாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது.

ஆனால், அப்துல்லா என்பவன் பாபாவின் இடத்தைத் தினந்தோறும் தவறாது சுத்தம் செய்து வருபவன் அவன் பாபாவின் தலையணை, படுக்கை விரிப்புக்கள் என்பவற்றைக் கூட தவறாது அன்றாடம் கூமைபோன்று சரி செய்து வைப்பான் அன் றைய தினம் அப்துல்லா வ ர வி ல் லை . அவன் கடமையை வேறொருவர் மேற்கொண்டார். அப்போது அங்கே யாரும் அந்தத் தட்டைப் பார்க்கவில்லை அது எப்படி அங்கே திடீரென்று தோன்றியது என மற்றவர்கள் குழம்பிப் போய் நின்றனர்.




சீரடி சாயியின் கடைசிக்காலம் நெருங்கும் சமயம் அவருடைய நெருங்கிய பக்தனான அப்துல்லாவிடம், தான் இந்த உடலை விட்டு நீங்கினால் வருந்த வேண்டாம் என்றும் தான் மீண்டும் அவதாரம் செய்து உனக்கு தரிசனம் அளிப்பதாகவும் வாக்குறுதி அளித்தார். இவரே எட்டு வருடங்களின் பின் பூவுலகில் அவதரித்த சத்யசாயி பாபா.

*ஜெய் சாயிராம்*

*யாதவன்*

# கற்கும் நிறுவனங்களாக நிலைமாற்றமடையும் பாடசாலைகள்

## மாறும் உலகில் கற்பித்தலை விட கற்றலே முதன்மை பெறுகிறது!



மரபு சார்ந்த பாடசாலை செயற்பாடுகளில், பாடசாலைகளும் ஆசிரியர்களும் பாடசாலைகளைக் கற்பிக்கும் நிறுவனங்களாகக் கருதிச் செயற்பட்டனர். தற்போதும் இவ்வெண்ணக் கரு பல பாடசாலைகளில் காணப்படுகின்றது. பாடசாலைகள் மட்டுமே அறிவை வழங்க முடியுமெனவும், ஆசிரியர்கள் அறிவின் உறைவிடமாகவும், அனைத்தும் தெரிந்தவராகவும், எல்லாம் வல்லவராகவும் விளங்கினார்.

மாணவர்களுக்கு எதுவும் தெரியாது எனவும் அவர்கள் வெற்றுக் கோப்பைகள். தானே அக் கோப்பையினை நிரப்ப முடியும். (Jug and mug role) எனவும் கருதிச் செயற்பட்டனர். கற்பித்தலே பாடசாலை ஒன்றின் பிரதான கருமம் என்ற பாடசாலையின் மரபு சார்ந்த பணியினை வெற்றிகரமாக நடத்தினர். (Teaching is more important than learning) மாணவர்களை நோக்கி வினாக்களை எழுப்புபவராகவும், ஆசிரியர் தன்னை ஒரு நிறைகுடமாகவும் கருதினார். மரபு சார்ந்த இந்தச் செயற்பாடுகளைப் பாடசாலைகளும் அங்கீகரித்தன.

மேலும் ஆசிரியர்களின் அதிகாரத்தின் கீழே வகுப்பறைகள் செயற்படுகின்றன. மாணவர்கள் ஆசிரியரின் வாக்கினை வேத வாக்காக எடுக்கவேண்டும். ஆசிரியர் அதிகார பலமுடையவராக, எல்லாம் தெரிந்தவராக செயற்பட்டார். பாடசாலைகள் என்றதும் மேற்படி எண்ணங்களே மனக் கண்முன் வரும். பாடசாலைகளின் பணியும் இது வென்றதான தோற்றப்பாடு நிலைகொள்ளும்.

உலகம் இன்று அதிவேகமான மாற்றங்களுக்கு உள்ளாகின்றது. குறிப்பாக அறிவு என்பது 21 ஆம் நூற்றாண்டில் பெரும் பிரவாகமாக ஊற்றெடுத்து ஓடுகின்றது. நிமிடத்திற்கு நிமிடம் அறிவு எனக் கருதப்பட்டது காலாவதியாவதும் அதனிடத்தில் புதிய அறிவு தோற்றம் பெறுவதுமாக இந்த நூற்றாண்டு காணப்படுகின்றது. நிகழ்ந்து வரும் யுக மாறுதல்களில் அறிவை வழங்கும் நிறுவனங்களும் அறிவைப் பெறுபவர்களும் அறிவை முகாமை செய்ய வேண்டிய (knowledge management) கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அறிவு சார் பொருளாதாரமொன்றில் அறிவு என்பது முதன்மை இடத்திற்கு வந்துள்ளது. அறிவுசார் சமூகங்களை உருவாக்குவது 21 ஆம் நூற்றாண்டில் பல நாடுகளின் தாரக மந்திரமாய் உள்ளது.

பாடசாலைகள் அறிவை வழங்கும் நிறுவனங்கள் என்ற வகையில் நிகழ்ந்து வரும் மாற்றங்களுக்கு ஈடுகொடுக்க வேண்டுமாயின் அவை தமது பாரம்பரியமான கருத்தியலில் இருந்து நிலைமாற்றம் அல்லது ஒன்றினை நோக்கி நகரவேண்டும். இதனால், பாடசாலைகளின் செயற்பாடு கட்டமைப்பு மற்றும் ஆசிரியர்களின் நடிபங்கு என்பன பெரும் மாறுதல்களுக்கு உள்ளாக வேண்டியுள்ளது. அதாவது பாடசாலைகள் வெறுமனே கற்பிக்கும் நிறுவனங்கள் என்ற நிலையில் இருந்து கற்கும் நிறுவனங்கள் என்ற நிலைக்கு நிலைமாற்றமடைய வேண்டும். அத்தகைய நிலைமாற்றமொன்றினைப் பாடசாலைகளில் ஏற்படுத்துவதற்கு ஆசிரியரும் அதிபரும் தமது நடிபங்குகளையும் நிலைமாற்றமுறச் செய்ய வேண்டும். இதற்காகப் பாடசாலைகள் என்ற மரபு சார்ந்த கோட்பாட்டுப் பின்னணியில் இருந்தும் செயற்பாட்டு முறைகளிலும் வேகமான மாற்றத்தினை ஏற்படுத்துவது அவசியம்.

### பாடசாலைகளும் நிலைமாற்று வகிபாகமும்

ஆசிரியரின் வகிபங்கானது பாடசாலையிலும், வகுப்பறையில் மரபு ரீதியான செயற்பாடுகளில் இருந்து மாற்றமடைவது மட்டுமல்ல. மாற்றத்திற்கான முகவராகவும் செயற்படவேண்டும். பாடசாலைகள் பிள்ளைகள் கற்பதற்கான இடம் என்ற கருத்தியலைக் கொண்டிருக்க வேண்டும். மாறும் உலகில் கற்றலானது கற்பித்தலை விட முக்கியமானது என்பதினை அவர் புரிந்துகொள்ள வேண்டும்.

(Learning is more important than Teaching) கற்றலுக்கு கற்றல், (Learn to Learn) என்பது 21 ஆம் நூற்றாண்டின் அறிவு குறித்த யுனெஸ்கோவின் விளக்கமாகும்.

இவற்றை ஆசிரியரும் அதிபரும் புரியுமிடத்து பாடசாலையானது கற்கும் இடம் என்ற நிலைமாற்ற சிந்தனை ஏற்படும் . இப் பின்னணியில் ஆசிரியர் தனது நடிபங்கானது பாடசாலையில் பிள்ளைகளுக்கு. கற்கும் சூழலை ஏற்படுத்துபவராக, கற்றலுக்குத் துணைபுரிபவராக, கற்றலுக்கான வளங்களை வழங்குபவராக, வழிப்படுத்துபவராக, வளவாளராக தனது பணி மாற்றமுற்றுள்ளது என்பதினை அறிந்துகொள்வார். இக்காரணத்தினால் ஆசிரியரும் பாடசாலைகளும் அறிவினை கைமாற்றும் மரபு சார்ந்த நடிபங்கில் இருந்து மாற்றமடைவர்.

கற்றல் ஒரு முடிவில்லாத நீண்டபயணம். கற்றல் செயற்பாடு ஒன்றில் மாணவரும் ஆசிரியரும் பங்காளிகள். (Teacher is also a co-learner) பிள்ளைகள் செயற்பாடுகளினூடாகக் கற்றலில் ஈடுபடுவர். கண்டறிதல் மூலம் படைப்பாற்றலை விருத்திசெய்வர். 2007 ஆம் ஆண்டு இலங்கைப் பாடசாலைகளில் ஆசிரியர் வகிபாகம் தொடர்பாக அமுலாக்கப்பட்டு வரும் ஆசிரியர் நிலைமாற்று வகிபாகமும் (Transformation role), கலைத்திட்ட சீராக்கமும் மேற்படி நோக்கங்களின் அடிப்படையிலேயே அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

மரபு ரீதியான ஆசிரியரின் நடிபங்கு இங்கு மாற்றத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் நடிபங்கு மாற்றமடைவதனால் மரபு ரீதியான பாடசாலைகளின் செயற்பாடும் மாற்றமடைய வேண்டும். அதாவது அதிபர்கள் (அதிபர்களும் ஆசிரியர்களே) பாடசாலையானது புதிய பரிமாணத்திற்கு ஏற்ப பிள்ளைகளும் ஆசிரியர்களும் பரஸ்பரம் கற்கும் இடம் என்ற கருத்தியல் நிலைமாற்றம் ஒன்றினை ஏற்று அதற்கான இடமாக அதனை அமைத்துக்கொள்ள வேண்டும். பாடசாலையின் வேலைத் திட்டமும் பாடசாலைக் கொள்கையும் பாடசாலை என்பது கற்கும் நிறுவனம் என்ற அடிப்படையில் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும். கல்வி ஒரு வாழ்க்கை நீடித்த செயன்முறை. பாடசாலைகளுக்கு அப்பாலும் அது விரிகின்றது. அது வாழ்நாட் கல்வியினைக் குறிக்கின்றது. அதற்கான வழிகாட்டலை வழங்கும் முதன்மை இடமாக பாடசாலை மாற்றமடைய வேண்டும். வேறு வகையில் கூறினால் ஒரு பாடசாலை வினைத்திறன் மிக்க பாடசாலையாக மாற்றமுற வேண்டும். மாற்ற வெள்ளத்தில் பாடசாலைகளும் ஆசிரியர்களும் மாற்றங்களுக்குள்ளாக வேண்டியுள்ளது.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலின் வளர்ச்சி மற்றும் வேகமாக வளர்ந்து வரும் அறிவு போன்ற காரணிகளினால் மனித வாழ்வு மிக வேகமாக மாற்றங்களுக்கு உட்படுகின்றது. இம் மாற்றங்கள் பாடசாலைகளுக்கு விதிவிலக்கானவையல்ல. மாற்றங்கள் தவிர்க்க முடியாதவையாகும். மாற்றங்களுக்கும் அறைகூவல்களுக்கும் நெகிழ்ந்து கொடுக்காத நிறுவனங்கள் சமகாலத் தேவைகளுக்கு முகம்கொடுக்க முடியாதவர்களையே உருவாக்கும். புதிய போக்குகளுக்கு ஏற்ப பாடசாலைகள் நிலைமாற்றமடைய வேண்டும். 2007 இல் அறிமுகம் செய்யப்பட்டு வரும் பல்வேறு கலைத்திட்டம் சார்ந்த செயற்பாடுகள் பாடசாலைகளும் ஆசிரியர்களும் அதிபர்களும் புதிய செல்நெறிகளை உள்வாங்கி மாற்றமுற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றனர்.

### கற்பித்தல் உபகரணமும் தர உள்ளீடும்

பாடசாலை ஒரு கற்பிக்கும் நிறுவனம். ஆசிரியர் பாடம் சொல்லிக் கொடுக்கும் உபாத்தியாயர். பாடத்தினை சிறப்பாகப் போதிப்பதற்கு அவருக்கு உபகரணங்கள் தேவைப்பட்டன. அவர் அதன் துணையுடன் மரபு சார்ந்த ஆசிரியப் பணியினை நிறைவேற்றினார். பாடசாலைகள் ஒரு கற்கும் நிறுவனம். ஆசிரியர் பிள்ளைகளுக்குக் கற்கும் சூழலையும், வழிகாட்டலையும் தேவைப்படும் போது உதவிகளையும் வழங்கும் ஏற்பாட்டாளராக நிலைமாற்றம் பெறும்போது, ஆசிரியரும் பிள்ளைகளும் இணைந்து கற்றலை மேம்படுத்தவும் கற்றலை தரமுள்ளதாக்கிக் கொள்ளவும் ஆசிரியர்க்கும் மாணவர்களுக்கும் தர உள்ளீடுகள் அவசியமாகின்றன.

அதாவது பிள்ளைகள் கற்றலின்போது- ஆய்வில் ஈடுபடும்போது- விளக்கமளிக்கும் போது- ஆசிரியர் வழிகாட்டலில் ஈடுபடும் போது (Engagement) போதியளவான தர உள்ளீடுகள் அவசியப்படுகின்றன. எனவே இங்கு இரு பகுதியினருக்கும் உபகரணங்கள், வளங்கள் என்பன வழங்கப்படும் நிலைமையை ஆசிரியர் ஒருவர் புரிந்து கொள்ளும் போது பாடசாலை ஒரு கற்கும் நிறுவனம் என்ற எண்ணம் மனதில் பதியும். குறிப்பாக தற்காலத்தில் கணனி, சி.டி. போன்றன கூட தர உள்ளீடுகளாக இடம் பிடித்துள்ளமை இங்கு நோக்குதற்குரியது.

எனவே, தரஉள்ளீட்டுப் பயன்பாடு கூட பாடசாலைகள் ஒரு கற்கும் இடம் என்பதினை குறிப்பதற்கான ஒரு விடயமாகும்.

மேலும் தற்போதைய 5 E கற்றல், கற்பித்தல் மாதிரி கூடப் பாடசாலைகள் ஒரு கற்கும் இடம் என்ற தோரணையிலேயே அமுலாக்கப்பட்டு வருகின்றது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக நாம் இன்னும் முழுமையாக இவ் விடயத்தினை விளங்கிக்கொள்ளவில்லை. புதிய போத்தலில் பழைய பாலினை ஊற்றுவதுபோல் பல பாடசாலைகள் விளக்கமின்மையால் 5 E மாதிரி கற்றல், கற்பித்தல் முறையியலைப் பின்பற்றுவதோடு பாடசாலைகள் கற்பிக்கும் நிறுவனங்கள் என்ற மரபு சார்ந்த சிந்தனையில் செயற்படும் இரண்டும் கெட்டான் நிலைகளும் காணப்படுகின்றன.

தற்போதைய ஆசிரியரின் நிலைமாற்று வகிபாகம், 5E கற்றல் கற்பித்தல் முறையியல் (Methodologey) இணைப்பு (Annexture) தர உள்ளீடு, ESDFP செயற்பாடுகள் என்பன பாடசாலையை ஒரு கற்கும் இடமாக மாற்றுவதற்கான ஏற்பாடுகள் என்பதனைத் தெளிவாக இனங்கண்டு கொள்ளவேண்டும்.

மரபு சார்ந்த பாடசாலைகள் கற்பிக்கும் நிறுவனங்களாகச் செயற்படும் போது,

- தெரிந்தவற்றைப் பாதுகாத்தல்.
- ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டவற்றை கற்றல்.
- இருப்பதினையே கட்டி எழுப்புதல்

என்ற தலைமுறை தலைமுறையாக ஆற்றி வந்த பணியினையே ஆற்ற முடியும். ஆனால், மாறிவரும்-வேகமாக வளர்ந்து வரும் அறிவுப்புலமொன்றில்

- தெரிந்தவற்றை மீளமைப்புச் செய்தல்.
- தீர்மானிக்கப்படாதவற்றை ஆய்வு செய்தல்.
- எவ்வாறு இருக்கவேண்டும் என்பதினைக் கட்டியெழுப்புதல்.

என்ற சிந்தனை நோக்கில் பாடசாலைகள் கற்கும் நிறுவனங்களாகச் செயற்பட்டாலே மேற்படி தூரநோக்கினை எய்த முடியம்.

### முடிவுரை

அனைத்துப் புலங்களிலும் அறிவு வெடிப்பு (Knowledge Explosion) நாலாபக்கமும் விரிவடைவதுடன் முன்னர் ஒரு பொழுதும் கண்டிராத நவ அறிவுப் புலங்கள் தோற்றம் பெறுவதுடன் எதிர்காலத்தில் இந்நிலை இன்னும் வேகமாக வளர்ச்சியடையும்.

புதிய அறிவும் அந்த அறிவடிப்படையில் தோன்றும் புலப்படாத எதிர்கால உலகிற்கு துணிவாக முகம்கொடுக்க பிள்ளைகளை தயார்ப்படுத்த வேண்டும்.

இதற்காக வாழ்நாள் முழுவதும் கற்றலில் அனைவரும் ஈடுபட வேண்டிய வாழ்க்கைக் கோலமொன்று உருவாகி வருகின்றது. சமூகம் கற்கும் சமூகமாகவும், அறிவுச் சமூகமாகவும் மாறி வருகின்றது. கற்றலில் ஈடுபட ஓர் ஆசிரியர் மீது தங்கியிருந்து அவர் கற்பிக்கும் வரை காத்திருக்க முடியாது. இதனால் தானாகவே ஒவ்வொருவரும் இடையறாது கற்க வேண்டிய நிலை தோன்றும்.

இதன்பிரகாரம் தோன்றிப் பரவிக் கொண்டு இருக்கும் புதிய அறிவினை தனது தேவைக்கு ஏற்ப உறிஞ்சிக் கொள்ளுதல், அறிவினைப் பெறு பவரே அதனை முகாமை செய்தல் என்பன அவரவர் சார்ந்தது.

அவ்வாறாயின் ஒரு பிள்ளை முறை சார்ந்து கற்க ஆரம்பிக்கும் இடம் பாடசாலையாகும். எனவே பாடசாலைகள் தமது நடத்தைகள், அமைப்புக்கள், வேலைத் திட்டங்கள் என்பனவற்றைக் கற்றல் அமைப்புக்களாக மாற்ற வேண்டும். அதாவது பாடசாலைகள் கற்கும் நிறுவனங்களாக நிலை மாற்றம் பெறவேண்டும். ◆

ஏ.சி.ஜோர்ஜ்
வலயக் கல்வி அலுவலகம்
யாழ்ப்பாணம்.

# ஆஸி. அணிக்கு ஆறுதல் வெற்றி; தென்னாபிரிக்கா தொடரைக் கைப்பற்றியது

(சிட்னி)

வேகப் புயல்களின் துல்லியமான பந்து வீச்சினால் தென்னாபிரிக்க அணியுடனான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்டில் 103 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று அவுஸ்திரேலிய அணி ஆறுதலடைந்தது.

இதன் மூலம் தென்னாபிரிக்க அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 3 டெஸ்ட், 2 இருபது-20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலிரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி தொடரை 2:0 என்ற கணக்கில் தனதாக்கிய நிலையில் மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் சிட்னியில் கடந்த 3ஆம் திகதி ஆரம்ப மானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுபெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 445 ஓட்டங்களை எடுத்தது.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 327 ஓட்டங்களை மாத்திரமெடுத்து அனைத்து விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதன் மூலம் 118 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையிலிருந்த அவுஸ்திரேலிய அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி 4 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 257 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடை நிறுத்தி தென்னாபிரிக்க அணிக்கு வெற்றி இலக்காக 376 ஓட்டங்களை நிர்ணயித்தது.

தொடர்ந்து 376 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி நேற்றுமுன்தினம் நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் ஒரு விக்கெட்டை மாத்திரமிழந்து 67 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் ஐந்தாவதும் இறுதி நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர்களுக்கு ஈடுகொடுக்க முடியாத நிலையில் சகல விக்கெட் டுக்களையுமிழந்து 272 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 103 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் அம்லா 59 ஓட்டங்களையும் டி வில்லியர்ஸ் 56 ஓட்டங்களையும் ஸ்ரையன், நிற்னி (ஆட்டமிழக்காமல்) ஆகியோர் தலா 28 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சைடில் 3 விக்கெட்டுக்களையும் பொலிங்கர்,ஜோன்ஸன் மற்றும் மக்டோனால்ட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ஹயூரிஸ் ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இவ் வெற்றியின் மூலம் சொந்த மண்ணில் தென்னாபிரிக்க அணியிடம் முழுமையாக தோல்வியடையாமல் தவிர்த்து அவுஸ்திரேலிய அணி ஆறுதலடைந்தது.

இதில் தென்னாபிரிக்க அணி தொடரை 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியது. இப்போட்டியில் முதலாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்களையும் பதம்பார்த்து அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு வழியமைத்த சைடில் ஆட்டநாயகனாகத் தெரிவானதுடன் தொடரில் நாயகன் விருதை தென்னாபிரிக்க அணித்தலைவர் சிமித் பெற்றார்.

இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது இருபது-20 போட்டி எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மெல்பேர்னில் நடைபெறுகிறது.

## மூன்றாவது ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து இலகு வெற்றி

மேற்கிந்திய தீவுகளுடனான மூன்றாவது ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து அணி 7 விக்கெட்டுகளால் இலகுவாக வெற்றியீட்டிக் கொண்டது. இதன் மூலம் இருநாடுகளுக்கும் இடையிலான 5 போட்டிகளை கொண்ட ஒரு நாள் தொடரை நியூசிலாந்து அணி 1:0 என்ற கணக்கில் சமநிலைக்கு கொண்டுவந்தது.

வெலிங்டனில் நேற்று நடைபெற்ற மூன்றாவது போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி மேற்கிந்தியதீவுகளை முதலில் துடுப்பெடுத்தாட பணித்தது.

இதன்படி களமிறங்கிய மேற்கிந்தியதீவுகள் அணி 41.2 ஓவர்களில் 128 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் சந்தர்போல் அதிகபட்சமாக 77 பந்துகளில் 45 ஓட்டங்களை பெற்றார்.

பந்துவீச்சில் அணித்தலைவர் டானியல் விக்டோரி 20 ஓட்டங்களை கொடுத்து 4 விக்கெட்டுக்களை வீழ்த்தியதுடன் கைல் மில்ஸ் மற்றும் டிம் சௌத்தி ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை பதம் பார்த்தனர்.

இந்நிலையில் இலகுவான இலக்கை நோக்கி பதிலெடுத்தாட களமிறங்கிய நியூசிலாந்து அணி 40 ஓட்டங்களை பெறுவதற்குள் 3 விக்கெட்டுக்களை இழந்தது. எனினும் 4ஆவது விக்கெட்டுக்காக இணைந்த ரோஸ் ரெய்லர், டானியஸ் பிளைன் ஆகியோர் பிரிக்கப்படாத இணைப்பாட்டமாக 89 ஓட்டங்களை பெற்று நியூசிலாந்தை வெற்றி பெறச் செய்தனர்.

இறுதியில் நியூசிலாந்து அணி 20.3 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கான 129 ஓட்டங்களை அடைந்தது. இதில் ரோஸ் ரெய்லர் 50 பந்துகளில் 5 பவுண்டரிகளும் 3 சிக்ஸர்களும் அடங்கலாக 51 ஓட்டங்களை பெற்றதோடு மறுபுறத்தில் பிளைன் 34 பந்துகளுக்கு 23 ஓட்டங்களை பெற்றார். பந்துவீச்சில் டெரன் பவல் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

நியூசிலாந்து சார்பில் பந்து வீச்சில் சிறப்பாக செயல்பட்ட டானியல் விக்டோரி ஆட்ட நாயகனாக தெரிவானார். இருநாடுகளுக்கும் இடையிலான நான்காவது ஒருநாள் போட்டி நாளை மறுதினம் ஒக்லாந்தில் நடைபெறவுள்ளது.

## ஐ.சி.சி தரவரிசையில் ஆஸி.தொடர்ந்து முதலிடம்

தென்னாபிரிக்காவுடனான மூன்றாவதும் கடைசியுமான டெஸ்ட் போட்டியில் 103 ஓட்டங்களால் வெற்றியீட்டிய அவுஸ்திரேலிய அணி ஐ.சி.சி டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தை தக்கவைத்துக் கொண்டது.

எனினும் தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் தொடரில் 1:2 என்ற கணக்கில் தோல்வியை சந்தித்ததனால் அவுஸ்திரேலிய அணி டெஸ்ட் தரவரிசை புள்ளிகள் 126ஆக குறைக்கப்பட்டது.

தென்னாபிரிக்க அணி 121 புள்ளிகளுடன் டெஸ்ட் தரவரிசையில் இரண்டாவது இடத்துக்கு முன்னேறியது. இதன்படி அவுஸ்திரேலியாவை விடவும் தென்னாபிரிக்க அணிக்கு 5 புள்ளிகள் மாத்திரமே குறைவாக காணப்படுகிறது.

இந்நிலையில் தென்னாபிரிக்க அணிக்கு தரவரிசையில் அவுஸ்திரேலியாவை பின் தள்ளி முதலிடத்துக்கு முன்னேறும் வாய்ப்பு இன்னும் அதிகமாகவே காணப்படுகிறது.

அவுஸ்திரேலிய-தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் தென்னாபிரிக்காவின் ஜொஹன்னர்ஸ்பேர்க்கில் எதிர்வரும் பெப்ரவரி 26ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்த தொடரில் தென்னாபிரிக்கா வெற்றி பெற்றால் அது முதலிடத்துக்கு முன்னேறி விடும். இந்திய அணி 118 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் உள்ளது.

அதேபோன்று பங்களாதேஷை டெஸ்ட் தொடரில் 2:0 என்ற கணக்கில் வெற்றி பெற்ற இலங்கைஅணி, ஐ.சி.சி டெஸ்ட் தரவரிசையில் மேலதிகமாக ஒரு புள்ளியுடன் மொத்தமாக 109 புள்ளிகளுடன் 4ஆவது இடத்தில் உள்ளமை குறிப்படத்தக்கது.

(5)


## 3ஆம் ஆண்டு நெஞ்சகலா நினைவலைகள்

வவுனியா பூந்தோட்டத்தை பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷிகேசன் வெதுப்பக உரிமையாளர்

**அமரர் சின்னராசா இராசையா**

(சித்தப்பா)



மலர்வு 07.10.1958

உதிர்வு 08.01.2006

குன்றின் விளக்காய் திகழும் -நம்
குடும்ப விளக்கே அப்பா
ஆண்டுகள் மூன்றானாலும் ஆறுமோ -நம்
துயரம் ஆறாது அப்பா!
எங்கள் நெஞ்சினில் குடியிருக்கும்
அன்பு தெய்வமே அப்பா!
எங்கள் வாழ்வு வளமுடன் திகழ
வழி காட்டிய ஜோதியே அப்பா!
நானிலம் போற்றும் கொடை வள்ளலே அப்பா!

உங்கள் புனிதமான ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகிறோம்.

V.M.றோட்,
சின்னப்பிள்ளையார் கோயிலடி,
பருத்தித்துறை.

உங்கள் நினைவுகளுடன்
மனைவி , மகன்.

(2086)



## மரண அறிவித்தல்



**நாகலிங்கம் கந்தசாமி**

(E.S.P. நிறுவன முகாமையாளர்)

ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் நயினாதீவு 5ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த **நாகலிங்கம் கந்தசாமி** 06.01.2009 செவ்வாய்க்கிழமை அன்று கொழும்பில் காலமானார். அன்னார் காலம் சென்றவர்களான நாகலிங்கம்-பொன்னம்மாவின் அன்பு மகனும், வீரகத்திப் பிள்ளை-அன்னம்மாவின் மருமகனும், சகுந்தலா தேவியின்(தேவி) அன்புக் கணவரும், குமரதாசன் (பாபு-பிரான்ஸ்), துவாரகாவின் (பபி) அன்புத் தகப்பனாரும், சதீஷ்னின் (லண்டன்) அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பூமணி (மலர்) மற்றும் ஞானேஸ்வரி (ஞானம்), ஆனந்தசிவம் (சிவா, சிவாஸ் வோச் வேக்ஸ், யாழ்), நவரத்தினராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், வடிவாம்பிகை, மகேஸ்வரி, இந்திராதேவி, காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் சண்முகரத்தினம், பிறேமளாதேவி (பேபி) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.01.2009) வியாழக்கிழமை அவரது சகோதரனின் இல்லத்தில் (215B, 4ஆம் ஒழுங்கை, கந்தர்மடம், பலாலி வீதி) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் நயினாதீவில் உள்ள அவரது இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்படும். அன்னாரது இறுதிக் கிரியைகள் (11.01.2009) ஞாயிற்றுக்கிழமை அன்று நயினாதீவில் இடம்பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

215B, 4ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி,
கந்தர்மடம்.

தகவல்:
நா.ஆனந்தசிவம்
(சகோதரன்,
சிவாஸ் வோச் வேக்ஸ்- யாழ்.)

(2088)

## புலிகளை தடை செய்வதன்...

புலிகள் மீதான தடைவிதிப்பானது ஒரு புதிய விடயம் அல்ல எனக் குறிப்பிட்ட அவர், ஒரு வருடத்திற்கு முன்பு அரசு யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்திருந்தது என்றும் அதன் காரணமாக சர்வதேச கண்காணிப்பாளர்கள் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள் என்றும் அந்த அடிப்படையில் இப்போது தடை செய்திருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் பி.பி.ஸி தமிழ் ஓசைக்கு வழங்கிய செவ்வி வருமாறு, தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடை செய்வதன் மூலம் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு ஒரு போதும் தீர்வுகாண முடியாது.

தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு இலங்கை அரசு ஆக்கபூர்வமாக நடவடிக்கைகள் எதனையும் செய்யவில்லை.

இது இந்திய அரசிற்கும் சர்வ தேசத்திற்கும் தெரியும். இத்தடை மூலமாக தமிழ்த் தேசிய பிரச்சினையை தீர்ப்பதில் அரசு பெரிய தடையை ஏற்படுத்தியிருக்கிறது.

இதன் மூலமாக எது விதமான முன்னேற்றமும் ஏற்படாது என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்து என்றும் இரா.சம்பந்தன் கூறினார்.

யுத்தம் நடக்கும் பிரதேசங்களிலிருந்து மிகக்குறைந்த அளவு மக்களே வெளியேறி இருக்கிறார்கள் அவர்களைக் கூட் தடுத்து வைத்து சுதந்திரமாக செயற்பட முடியாமல் பலவிதமான இன்னல்களை அரசு ஏற்படுத்தியிருக்கிறது.

இது விடயமாக சர்வதேச மனித உரிமைக் குழுக்கள் கூட கண்டனம் வெளியிட்டிருக்கிறார்கள்.

தமிழ்மக்கள் யுத்தம் நடக்கும் பிரதேசத்தில் இருந்து வெளியேறிவர மிக ஆர்வமாக இருக்கிறார்கள் என்ற முடிபிற்கு எவரும் வர முடியாது. வந்த மக்களைக் கூட அரசு முறையாக நடத்தவில்லை.

கிழக்கில் அவ்வாறு வெளியேறியவர்களில் பலர் காணாமல் போனார்கள். எனவே இதை காரணமாக கூறுவது அவர்களுக்கு ஒரு காரணம் தேவை என்பதற்காக கூறியதாகத்தான் கொள்ளவேண்டும் என சம்பந்தன் மேலும் கூறினார்.

(சு)

## கிளாலி மற்றும் முக...

பட்டிருக்கும் புதுக்காட்டுப் பகுதிக்கு பின்வாங்கிச் சென்றிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும் ஆட்டிலறித் தாக்குதல்களுடன் இராணுவத்தினர் முன்னேறிச் செல்ல முயற்சிப்பதாக ஆங்கில இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதனால் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தின் 55-வது படைப்பிரிவினருக்கும் இடையில் நாகர்கோவில் பகுதியில் மோதல்கள் நடைபெறுவதாகவும் தெரியவருகிறது.

யாழ்.குடாநாட்டின் தென்பகுதியிலுள்ள இயக்கச்சியை உள்ளடக்கிய புதுக்காட்டுச் சந்தியிலிருந்தும் ஆனையிறவின் வட பகுதியிலிருந்தும் விடுதலைப் புலிகள் வெளியேறி வருவதாக அந்த இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.

எனினும் இந்தப் பகுதியிலிருந்து விடுதலைப் புலிகள் இராணுவத்தினரின் தாக்குதல்களுக்கு பதில் தாக்குதல் நடத்தக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுவதாக ஆய்வாளர்கள் கூறியிருப்பதாகவும் அந்த இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கிளாலி மற்றும் முகமாலை முன்னரங்கப் பகுதிகளை இராணுவத்தினர் முழுமையாகக் கைப்பற்றியிருப்பதாக வெளியாகியிருக்கும் தகவல் குறித்து விடுதலைப் புலிகள் தரப்பில் இதுவரை எந்தத் தகவல்களும் வெளியிடப்படவில்லை.

(சு-5)

## விடுதலைப் புலிகளின்...

புறப்பட்டு வடபோர்முனையின் கரையோரப் பகுதிகளை அடைந்து கண்காணிப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ளது.

அதிநவீன கண்காணிப்பு சாதனங்கள் பொருத்தப்பட்ட இந்த விமானம் பின்னர் மீண்டும் சென்னை திரும்பாது வேறு விமான நிலைய மொன்றில் தரையிறங்கியுள்ளது.

40 ஆயிரம் அடி உயரத்தில் பறக்கும் இந்த விமானங்களில் துல்லியமாக படங்களை எடுக்கும் சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன. முகில் கூட்டங்களினூடாக தரையில் நடைபெறும் சம்பவங்களைப் படம் பிடிக்கும் தகைமை கொண்ட இந்த ஒளிப்பட சாதனங்கள் சிறிய வாகனங்களையும் மனித நடமாட்டங்களையும் கண்காணிக்கக் கூடியது.

இந்திய உளவு அமைப்பின் இந்த வான் ஆய்வு மையத்தை சேர்ந்த விமானங்களை உளவு நிறுவனங்களைச் சேர்ந்த விமானிகளே செலுத்துவதுண்டு. அதனை வான்படை விமானிகள் செலுத்துவதில்லை.

மேலும், அவை குறிப்பிட்ட ஒரு நிலையத்தை பயன்படுத்துவது கிடையாது. பொதுமக்கள் பயன்படுத்தும் விமான நிலையங்களையும் வான்படையின் நிலையங்களையும் மாறிமாறிப் பயன்படுத்துவதுண்டு.

இதனிடையே வான் ஆய்வு மையத்தின் இந்த நடவடிக்கை தொடர்பாக தமக்கு சிறிதளவான தகவல்கள் தெரியும் என சென்னை விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வேறு ஒரு நிலையத்திலிருந்து வந்த விமானமொன்றே சென்னை விமான நிலையத்திலிருந்து புறப்பட்டுச் சென்றதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## படையினர்...

பழைய கண்டிவீதி ஊடாக பல்குழல் வெடிகணை மற்றும் ஆட்லறி எறிகணைச் சூட்டாதரவுடன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை 10மணியளவில் படையினர் முன் நகர்வினை மேற்கொண்டனர்.

இம் முன் நகர்வுக்கு எதிராக விடுதலைப் புலிகள் தீவிர எதிர்த் தாக்குதல் நடத்தி படையினரின் நகர்வினை முறியடித்தனர்.

இதில் படையினருக்கு பாரிய உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளதுடன் கொல்லப்பட்ட படையினரின் 7 உடலங்கள் உட்பட படையப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என புலிகள் தெரிவித்துள்ளனர். (சு-5)

## புலிகளின்...

அழிக்க மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரிக்கும்.

கடந்தகாலங்களைப் போல் விடுவிக்கப்பட்ட பகுதிகள் மீண்டும் விடுதலைப் புலிகள் கைகளில் விழுந்துவிடக் கூடாது.

விடுதலைப் புலிகளின் விமானப் படையை அழிக்க வேண்டிய அவசியம் உள்ளது. இதுவரை விடுதலைப் புலிகளின் விமானப் படையை அழித்துவிட்டதாக எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. இந்த விவகாரத்தில் அரசாங்கம் கண்டிப்பாக கவனம் செலுத்த வேண்டும் என்றார் அவர்.

(சு-5)

## எறிகணைத்...

மீதும் படையினரின் எறிகணைகள் வீழ்ந்து வெடித்துள்ளன. இதில் பாடசாலைக் கட்டடங்கள் சேதமடைந்துள்ளன.

படையினரின் இந்தத்தொடர் எறிகணைத் தாக்குதல்களினால் பெருமளவு சொத்தழிவுகளை பாடசாலைகள் சந்தித்துள்ளன என வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

(சு-5)

## விடுதலைப் புலிகளை...

தமிழீழ விடுதலைப் புலிகளை அரசு நேற்று பயங்கரவாத அமைப்பாக தடைசெய்துள்ளது. விடுதலைப் புலிகள் மீதான தடை அறிவிப்பினை விவசாயத்துறை அமைச்சரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளருமான அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நேற்று மாலை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

புலிகள் மீதான தடை தொடர்பான பிரேரணை ஒன்றினை நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சமர்ப்பித்தார் எனவும் அமைச்சரவை அப்பிரேரணைக்கு ஏகமனதாக ஒப்புதல் அளித்ததாகவும் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

உடனடியாக அமுலுக்குவரும் வகையில் இத்தடை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது எனவும் பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர் கருத்து வெளியிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது இலங்கை அரசு மூன்றாவது முறையாக தடையை விதித்துள்ளது. விடுதலைப் புலிகள் முதன்முறையாக 1983 ஆம் ஆண்டு இலங்கையில் தடை செய்யப்பட்டனர்.

பின்னர் 1987ஆம் ஆண்டு அந்தத் தடை நீக்கப்பட்டு பின்னர் மீண்டும் 1998ஆம் ஆண்டு தடைசெய்யப்பட்டனர். 2002ஆம் ஆண்டு போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டதையடுத்து அவர்கள் மீது நீக்கப்பட்டிருந்த தடை தற்போது மீண்டும் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆம் திகதி விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள மக்களை 2009ஆம் ஆண்டு தொடங்குவதற்கு முன்னர் விடுவிக்காவிட்டால் அவர்கள் மீது தடை விதிக்கப்படும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எச்சரித்திருந்தார்.

அவ்வாறு விடுதலைப் புலிகள் மக்களை விடுவிக்காத காரணத்தால் இத்தடை விதிக்கப்படுகிறது என்று அரசு தெரிவித்துள்ளது.

நாட்டில் அவசரகாலச்சட்டத்தை பயன்படுத்தி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் விடுதலைப் புலிகள் மீதான தடையை விதித்திருப்பதாக விவசாய அமைச்சரும் அரசின் பேச்சாளருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இந்த முடிவுக்கு அமைச்சரவை ஒருமனதாக ஆதரவு தெரிவித்ததாகவும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார். (சு-5)


புதிய பிரிவுகள் ஆரம்பம்
Diploma Courses...
* Dip In Computerized Accounting
## MS Office ## DTP *V.B, VB.net
* Hardware * Web Designing
* Video Editing *AutoCAD *3D
International Courses...
*MCP *MCSE *MCTS *MCSD
*CISCO *A+ *N+ *SUN JAVA *CIW *Dell
*ComTIA SECURITY+ *HP *Adobe *IBM *Linux
Degree Course * BIT Semester 1,3 & 5
## இன்றும், நாளையும் பதிவுசெய்வோருக்கு கட்டண சலுகை
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP
www.mcsitacademy.com

நீங்களும் கணனி பட்டதாரியாகலாம்
A/L தடையல்ல
Bachelor of Information Technology (University of Colombo)
இலங்கை பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் உடையது
யாழிலேயே கற்கும் வசதி
வெளிநாட்டு பல்கலைக்கழகங்களிலும் கற்கை நெறியை தொடரும் வசதி
கொழும்பு பல்கலைக்கழக BIT பட்டமளிப்பு வைபவத்தின் போது சிறப்பு விருது பெற்ற நிறுவனம்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP

கீழ்வரும் பிரிவுகள் கீழ்வரும் ஒழுங்கில் ஆரம்பமாகின்றன.

| பிரிவுகள் | காலம் |
|---|---|
| A/L - 2011 | 10 - ஜனவரி - 9 am |
| A/L - Day class - கலை | 10 - ஜனவரி - 9 am |
| A/L - Day class - வர்த்தகம் | 12 - ஜனவரி - 9 am |

DMI

Diploma in English
Spoken with Grammar
Phonetics Practices.
Computer Based Prac
புதிய பிரிவுகள் ஆரம்பம் 09.01.2009 08.00AM
★ Practice
★ Spoken
★ Letter W
★ Listening
விபரங்களுக்கு நேரில்: 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP


### அன்பான அஞ்சலி!

'அன்பான இயேசு ஜீவ கீதங்கள்' என்.பத்மதேவா அவர்களின் மரணம் கண்டு அவரை பரலோகில் காண்போம் என்று விசுவாசிக்கின்றோம்.

அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

'கர்த்தருக்குள் மரிக்கின்றவர்கள் இது முதல் பாக்கியவான்கள்'

(வெளி 14:13)

'அற்புத மத்தியஸ்தானம்'
அசெம்பிளி ஒவ் கோட்,
கோண்டாவில்.
www.mcagchurch.org

போதகர்,
நிர்வாகிகள்,
சபையோர்.
T.P:- 021 222 6878

(2089)


2009 → கலை வர்த்தகம்
NIRU
ஆரம்பம் 10.01.2009 சனி - 9 மணி
நிரு
கணித விஞ்ஞானம்
ஆரம்பம் சனி - 3 மணி
(C-1961)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Aat (Sri lanka)
Foundation, Intermediate, Final
Medium:- தமிழ் & English
விரிவுரைகள் 10-01-2009 (8.00 am) ஆரம்பமாகின்றன
அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்
External Degree
GAQ, BA 1, BA (Final)
1st in com, B com (1,11 & Final)
வகுப்புக்கள் ஆரம்பம்
Banking Course
DBF பிரிவுகள் ஆரம்பம்
Furthur Detail
Director
Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
(C-1960)

Maths Centre மாணவர்களின் சாதனைகள் பாரீர்
M.M.V. Road, Nelliady.
கலைப்பிரிவு, மாவட்ட மட்டத்தில்
★ திவ்யா 3A (3ஆம் இடம்) (பரு.மெதடிஸ்த மகளிர் கல்லூரி)
★ சத்தியவாணி 3A (4ஆம் இடம்) (நெல்லியடி ம.ம.வித்தியாலயம்)
★3A எடுத்த மாணவர்கள் 17 பேர்
★A,2B எடுத்த மாணவர்கள் 8 பேர்
★2A,B எடுத்த மாணவர்கள் 31 பேர்
★A,B,C எடுத்த மாணவர்கள் 16 பேர்
★2A,C எடுத்த மாணவர்கள் 12பேர்
இவர்களுக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்
-நிர்வாகி, ஆசிரியர்கள்.
A/L - DAY CLASS ★ வழமையான ஆசிரியர் குழு
ஆரம்பம்- 09.01.2009 வெள்ளி 7.00 AM
★2011 வகுப்பு நடைபெறுகிறது.
விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். -நிர்வாகி
(C-1955)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.01.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.